
உ

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

# சிவநெறி



தம்பலகாமத்துள் வாழ்
தனிப்பரம் பொருளே போற்றி!

விலை
15/=

மலர் 8
இதழ் 2

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்





பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

நத்தார் படை ஞானன் பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானயுரி போர்த்தமன வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே


# சிவநெறி

முத்திங்கள் இதழ்

**Sivanery - Quarterly Magazine**

393, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை

பிரமாதி வருடம் சித்திரை, வைகாசி ஆனி 1999



திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை வெளியிட்டு வரும் காலாண்டு ஆன்மீக சஞ்சிகை "சிவநெறி" அருள் மிகு திருத்தம்பலகாமம் ஆதி கோணநாயகர் சுவாமியின் அருளால் தனது எட்டாவது ஆண்டின் இரண்டாவது இதழாக மலர்ந்துள்ளது.

அத்துடன் திருத்தம்பலகாமம் ஆதிகோண நாயகர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் ஆகியவற்றை ஒட்டிய சிறப்பிதழாகவும் "சிவநெறி" அமைகின்றது.

இச்சிறப்பிதழில் திருக்கோணமலை மாவட்டத்தின் சைவத்தமிழ் பாரம்பரியத்தின் தொன்மையையும் மேன்மையையும் எடுத்துரைக்கும் சிறப்புக் கட்டுரைகள், கவிதைகள் பிரசுரமாகியுள்ளன.

திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய அறங்காவற் சபையினர் சிவநெறியின் இவ்விதழ் வெளிவருவதற்கான நிதி மற்றும் பூரண ஆதரவை வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அருளன்பர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம். இதற்காக திருத்தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலய அரங்காவற்சபையினருக்கு திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கின்றது.

## திருத்தம்பலகாமத்தில் இந்து இளைஞர் பேரவையின் பணிகள்



திருத்தம்பலகாமம் கிராமத்தில் அருள்மிகு ஆதிகோணநாயகப் பெருமானின் திருவருட் துணையுடன் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆற்றியுள்ள பல்வேறு பட்ட அகதிகளுக்கான புனர்வாழ்வுப் பணிகளையும் ஆன்மீகப் பணிகளையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்வதில் மனநிறை வடைகின்றோம். 1983ம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரை தம்பலகாமக் கிராமத்தை புனர்வாழ்வு பணிகளுக்காக பொறுப்பேற்று பணியாற்றிய ஒரேயொரு தொண்டர் நிறுவனமாக இப்பேரவை விளங்கியது. பின்னர் 1990ஆம் ஆண்டு இம் மாவட்டம் எங்கும் வன்செயல் நடைபெற்றதால் தம்பலகாமத்தில் பணியாற்றச் சில தொண்டர் நிறுவனங்கள் முன்வந்ததால் பேரவையானது தனது செயற் பணிகளை பட்டிமேடு, சிப்பித்திடல், கள்ளிமேடு, கூட்டாம்புளி, கரைச்சைத்திடல் ஆகிய பகுதிகளுடன் மட்டுப்படுத்தி தன்னாலான பணிகளை ஆற்றியுள்ளது. பேரவைப் பணிகள் சுருக்கமாக தரப்படகிறது.


**சிவஞானச் செல்வர் செ. சிவபாதசுந்தரம்**
மதிப்பார்ந்த பொதுச் செயலாளர்
திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை


**ஆன்மீகப்பணிகள்**

**அறநெறிப்பாடசாலைகளின் உருவாக்கம், அருளாளர்களின் அருளுரைகள்**

உ+ம் நல்லைத்திருஞான சம்பந்தர் ஆதினம் மூலம் சோமசுந்தரபரமாசாரியார் சுவாமிகள் அருளுரை, சமய நூல் கள் உவந்தளிப்பு சிவநெறி வெளியீடு, கூட்டு வழிபாடு, ஆலய சிரமதானம்

**புனர்வாழ்வுப் பணிகள்**

விவசாயச் செய்கைக்கான ஊக்குவிப்புகள், மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகள், பாலர் பாடசாலை நடத்தி வருதல், தம்பலகாமம் சந்தியிலிருந்து கோவிலடி வரை குழாய் மூலமான குடிநீர் விநியோகத்திட்டம், விதவைகளுக்கான மல கூட அமைப்புத் திட்டம், இளைஞர்களுக்கான தலைமைத் தகமைப் பயிற்சிகள், இளைஞர்களுக்கான உழவு இயந்திரப்பயிற்சி நெறித்திட்டம். மேற்படித்திட்டங்கள் யாவும் சிறப்புற நடைபெற தம்பலகாமம் இந்து இளைஞர் மன்றத்தினர் பேரவையுடன் முன்னின்று உழைத்ததை நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

ஆதிகோணநாயகப் பெருமானின் 1980ஆம் ஆண்டுக் கும்பாபிஷேகத்திலும் இவ்வாண்டுக் கும்பாபிஷேகத்திலும் பேரவையின் தொண்டர்கள் இருபத்தைந்துக்கும் மேற்பட்டோர் ஆலய பரிபாலன சபையினருக்கு ஒத்தாசையாக இருந்து உதவினர். தம்பலகாமம் இந்து இளைஞர் மன்றத்தினர் தாகசாந்தி அளித்து பக்தர்களுக்கு உதவினார்கள். அன்பு இல்லக் குழந்தைகளும் அன்பு இல்லத் தந்தையும் எல்லோரையும் விட நிறைந்த பணிகளை ஆற்றினார்கள். நாம் அதற்கு உதவியாக எமது வாகனத்தை வழங்கி உதவினோம். எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளால் ஆலய வெளி வீதியிலே ஆலய பரிபாலன சபையினரால் வழங்கப்பட்ட காணியிலே அத்திவாரமிடப்பட்டுள்ள தம்பலகாமம் இந்து இளைஞர் மன்றத்தின் அலுவலகமும் கலாச்சார மண்டபமும் பூர்த்தியடைந்து அதன் மூலம் சிறப்பான ஒருங்கிணைந்த இந்து சமய எழுச்சிப் பணிகளை நாமெல்லோரும் இணைந்து மேற்கொள்ள எல்லாம் வல்ல ஆதி கோணநாயகப் பெருமானின் அருளை வேண்டுவதோடு பேரவையானது கிட்டத்தட்ட 90 லட்சம் ரூபாவுக்கான பல்வேறுபட்ட பணிகளை தம்பலகாமம் கிராமத்தில் நிறைவேற்றியுள்ளமையை குறிப்பிடுவதில் மனநிறை வடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. பவளீநாதன்



சிவமயம்

# ஆசிச் செய்தி

ஈழத் திரு நாட்டில் உள்ள சிவஸ்தலங்களுள்ளே முதன்மையும், முக்கியத்துவமும் பெற்று திருகோணமலை சார் தம்பலகாமம் கிராமத்தே அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஹம்ச கமனாம்பிகா தேவி சமேத ஆதி கோண நாயகரின் அருள் யாவருக்கும் கிட்ட வேண்டு மெனப் பிரார்த்திக்கின்றேன்.

திருக்கோணமலை இந்து இளைஞர் பேரவையிற்சமைய சம்பந்தமான செயலாற்றல்கள் மிக மிக பாராட்டுக்குரியன. இன்றைய காலகட்டத்தில் இப்படியானதோர் இயக்கம் எமது தமிழையும் சைவத்தையும் பேணிப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டிருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

திருக்கோணமலை மாவட்ட இளைஞர் பேரவையின் காலாண்டு சஞ்சிகையான "சிவ நெறி" யின் எட்டாவது ஆண்டின் இரண்டாவது இதழை தம்பலகாமம் ஹம்ச கமனாம்பிகா தேவி சமேத ஆதி கோண நாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் அதைத் தொடர்ந்து மண்டாலபிஷேகம் சங்காபிஷேகம் ஒட்டி சிறப்பிதழாக வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**சு. கா. சிவசுப்பிரமணியம். J. P**
தலைவர்,
ஆதி கோணநாயகர் தேவஸ்தானம்
தர்மகர்த்தா சபை
தம்பலகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

தம்பலகாமம் இயற்கையழகு நிறைந்த சைவக்கிராமம். தம்பலகாமத்தில் ஆதிகோணநாயகர் ஆலயம் இருக்கின்றது. இந்த ஆலயமும் கிராமமும் தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புடைய சரித்திரப் பின்னணியோடு பின்னிக் கிடக்கின்றது. குளக்கோட்டு மன்னன் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்துள்ளார். இந்த மன்னனால் திருக்கோணேஸ்வரத் திற்குச் செய்யப்பட்ட திருப்பணிகள், மானியங்கள் யாவும் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது. இக் கல்வெட்டிலுள்ள ஆணைகளை இன்று தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயம் கடைப்பிடித்து வருகின்றது. ஆதி கோணேசர் என்பதிலுள்ள "ஆதி" என்ற சொல் திருக்கோணேஸ்வரத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. போத்துக்கீசர் கோணேஸ்வரத்தில் செய்த அட்டூழியங்களே தம்பலகாமம் கோணேசர் கோயிலுக்கு "ஆதி" என்ற அடைமொழியைச் சேர்க்கக் காரணமாயிருந்தது. குளக்கோட்டு மன்னன் கோணேசர் கல்வெட்டில் கூறிய ஆணை ஒன்றைத் தம்பலகாமம் கோணேசர் கோவில் கடைப்பிடித்து வருகின்றது. "மன்னு பச்சைப் பட்டுவரின் மழையுதவும், சிவப்பு மகா வெயிலைக் காட்டும்" என்பது அற்புத நிகழ்ச்சியாகும்.

வானளாவிய பஞ்சதள ராஜகோபுரத்தையுடையது ஆதி கோணநாயகர் கோவில். தென்னஞ்சோலைகள் சூழ்ந்த இயற்கையழகுப் பொலிவோடும் வற்றாத நீர் வளத்தினால் சோழ நாடு போல் செந்நெற் கழனிகள் சூழ்ந்து நிறைந்த இடம் தம்பலகாமம். ஆதிகோணநாயகர் கோயில் இராஜகோபுரம் தனிச் சிறப்பாக அமைந்துள்ளது.

"கோபுரம் காணாத கண்ணென்ன கண்ணோ கும்பிட்டு நில்லாத கையென்ன கையோ!" என்றும் இறவாப்பணி செய்ய கோணைநாதப் பெருமானின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**மு. கோ. செல்வராசா**
கௌரவ காரியதரிசி

**நாயன்மார்திடல்**
தம்பலகாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் தர்மகர்த்தாசபை பொருளாளர்**

**திரு. ஆறுமுகம் தங்கராசா அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

ஈழவளநாட்டில் சிறப்புற்றோங்கும் எமது ஆதிகோணநாயகர் தர்மகர்த்தாசபைப் பொறுப்பை நாங்கள் 1973ம் ஆண்டில் ஏற்றுக்கொண்டோம் 'மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதற்கிணங்க சிறப்பான வகையில் இத்திருத்தலத்திற்குப் பொருளாளராகச் சேவையாற்றியதுடன் 1980 ம் ஆண்டில் பல லட்சம் ருபா செலவில் கோயில் திருப்பணி செய்து கும்பாபிடேகமும் செய்தோம்.

கடந்தகால வன்செயலில் மீண்டும் இக்கோயில் சேதமடைந்தது. இருப்பினும் எமது இடைவிடாத முயற்சியின் காரணமாக எமது ஆற்றல் மிகு தலைவர் செயலாளர் உறுப்பினர்களின் அயராத உழைப்பின் காரணமாக திரும்பவும் இக்கோயில் புனரமைக்கப்பட்டு கும்பாபிடேகமும் செய்யப்படுகிறது.

பொருளாளர் என்ற வகையில் இவ்விழாச் சிறப்புற எனது நல்லாசிகள் அனைத்தையும் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

# ஆசிச் செய்தி

ஈழத்து ஈச்சரங்களில் ஒன்றெனப் போற்றப்படும் திருக்கோணஸ்வரப் பெருமானது புகழைத் தாங்கிய திருத் தம்பலகாமத்தில் அருள் வேண்டியோருக்கு வேண்டியவற்றை அருளி காத்து வரும் கோணேஸ்வரப் பெருமானை ஸ்ரீ ஹம்ச ஹமனாம்பிகா தேவியுடன் வீற்றிருக்கும் தலம் தம்பலகாமத்தின் கோயிற் குடியிருப்பு என்னுமிடத்தில் வானளாவிய அழகிய வர்ண வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்பங்கள் அமைந்த இராஜ கோபுரத்துடன் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்கின்றதென்றால் இந்துக்களாகிய நாம் இறைவனை எண்ணிப் பரவசமடைகின்றோம். ஏறத்தாள 15 வருடங்களின் பின் இவ்வாலயம் சிறந்து நிற்க வேண்டும் என உழைத்த பரிபாலன சபையினரையும் மேலும் இப்பணிகளுக்கு பொறுப்பாக இருந்து அல்லும் பகலும் உறக்கமின்றி இயங்கிய அருட் கலைத் திலகம் அராலியூர் மகேஸ்வரன் ஆச்சாரியார் அவர்களையும், அவருடைய உதவியாளர்களையும் தென்னிந்திய சிற்ப, வர்ண வேலைக் கலைஞர்களையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கு ஸ்ரீ ஹம்ச ஹமனாம்பிகாதேவி சமேத ஆதி கோண நாயகப் பெருமானது அருள் கிடைத்து அவர்களது இவ்விறை பணி தொடர வேண்டும். பெரு வாழ்வு வாழ வேண்டும் என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**க. நாகராசா**
முன்னைநாள் கணக்காளர்
ஆதி கோண நாயகர் தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து சமய வரலாற்றின் ஊற்றுக் கண்

ஏனைய ஆலயங்களின் வரலாறுகளிலும் பார்க்க திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர் பற்றிய வரலாற்றுக்குத் தனிச் சிறப்புண்டு.

இந்த நாட்டு தமிழ் மக்களின் தொன்மையை, அவர்கள் கண்ணெனப் பேணிய சிவநெறியின் தொன்மையை இவ்வாலய வரலாறு பறைசாற்றி நிற்கின்றது.

செந்தமிழினது தொன்மையையும் சிவநெறியின் தொன்மையையும் விரித்துக் கூறும் ஊற்றுக் கண் இக்கோயிலின் வரலாறு.

தென்கைலை எனப்படும் திருக்கோணேஸ்வரத்தின் மூல விக்கிரகம் இங்கு பேணிக்காக்கப்பட்டு பூசிக்கப்படுவதாலும் வேடுவர் காலத்துப் பூசைகள் வேள்விகள் இங்கு இன்னும் பேணப்படுவதாலும் கோயிலும் குளமும் கண்ட குளக்கோட்டன் விதித்த நடைமுறைகள் இன்றும் இக்கோயிலில் கைகொள்ளப்படுவதாலும், இதனை ஆதி கோணநாயகர் ஆலயம் என்று போற்றுவது நன்கு பொருந்தும்.

வயலும் வயல் சார்ந்த நிலவளமும், நீர் வளமும் மிக்க மருத நிலமாம் தம்பலகாமம் சோறுடைத்து என்பார்கள். ஆதி கோணநாயகப் பெருமான் மருத நிலத்துத் தெய்வமாக இங்கு போற்றப்படுகிறார்.

**வே. வரதசுந்தரம்**
ஆசிரியர், சந்நிதி

இக்கோயிலில் நிகழும் அற்புதங்களும் தனித்துவமானவை தனியார் வாழ்விலே நிகழும் அற்புதங்களுக்கு மேலாக சமூகரீதியான அற்புதங்களும் இங்கு நிகழத்தான் செய்கின்றன.

ஊர் வயல்களுக்கு நீர் தேவைப்படும் போது விதிப்படி பொங்கலையும், வேள்வியையும் செய்து கோணநாயகருக்கு நேர்ந்து பச்சைப் பட்டு கட்டி மழை பெய்வதும் நீர் மிகுந்து பைங்கூழ் பாதிப்புறும் போது கோணநாயகருக்கு நேர்ந்து சிவப்பு நிற பட்டுக் கட்டி வெயிலில் காய்வதும் திருத்தம்பலகாம மண்ணில் இன்றும் நிகழும் சமூகரீதியான அற்புதமாகும்.

வைகாசி மாதம் வந்தால், திருக்கோணமலை மாவட்டமே களை கட்டிவிடும் வைகாசிப் பூரணைக்கு முந்திய திங்களன்று திருக்கோணமலைப் பத்திரகாளி கோயிலிலும் அதற்கு முந்திய திங்கட்கிழமை பாலம் போட்டாறு அம்மன் கோயிலிலும் அதற்கு பிந்திய செவ்வாயன்று சல்லியம்மன் கோயிலிலும் பொங்கல் நடைபெறும். அம்மன் மீது அளவு கடந்த பக்தியுடன் வழிபாடுகள் நிகழும்.

பாலம்போட்டாற்று அம்மன் கோயிற் பொங்கலன்று, திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் கோயிலில் இருந்தும், திருக்கோணமலை முத்துமாரியம்மன் கோயிலில் இருந்தும் ஆண்கள், பெண்கள், சிறுவர் ஆயிரக்கணக்கில் யாத்திரை செல்வர்.

ஆண்டில் ஒரு தடவை நிகழும் இவ்விழாவில் தம்பலகாமம் கோணநாயகர் கோயிலின் பங்களிப்பு சிறப்பானது. பாலம்போட்டாற்று அம்மன் கோயில் விக்கிரகம் பாதுகாப்புக் கருதி தம்பலகாமம் கோணநாயகர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விக்கிரகம் அவ்விழாவன்று தம்பலகாமம் கோணநாயகர் கோயிலில் இருந்து காட்டின் மத்தியில் உள்ள பாலம்போட்டாற்று அம்மன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரவு முழுவதும் பொங்கலும் பூசைகளும் நடைபெற்று அடுத்த நாள் திரும்பவும் தம்பலகாமம் கோணநாயகர் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படும்.

அதே போன்று ஆடி அமாவாசைத் தீர்த்த நன்னாளன்று மூதூர் மாவட்டம் களை கட்டும். மகாவலி கங்கை கடலில் சங்கமமாகும் கங்கைத் துறைக்குத் தம்பலகாமம் கோணநாயகர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவார்.

இரவு முழுவதும் அவர் ஆலங்கேணி அருள் மிகு விநாயகர் கோயிலில் தங்கியிருப்பார். இரவு முழுவதும் பக்தர்கள் கூடி வழிபாடுகள் நடைபெறும். விடிந்ததும் கங்கைத் துறையில் தீர்த்தமாடி கோணநாயகர் திருத்தம்பலகாமக் கோயில் திரும்பிச் செல்வார்

இவ்வாறு திருக்கோணமலை, மூதூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் நடைறெும் இரு சமய விழாக்களிலும் தம்பலகாமம் கோணநாயகர் ஆலயம் மையமாகத் திகழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பலகாமத்திலே சிறப்பு வாய்ந்த சிவன் ஆலயம்

தம்பலகாமம் இயற்கையழகு நிறைந்த சைவக் கிராமம். திருக்கோணமலைப் பட்டணத்திலிருந்து கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் இருபத்தினாலு கிலோமீற்றர் தூரத்தில் ஓருகிளைப்பாதை பிரிகின்றது. அங்கிருந்து மூன்று கில்லோ மீற்றர் தூரத்தில் உள்ள தம்பலகாமத்தில் இந்த ஆலயம் இருக்கின்றது. இந்த ஆலயமும் கிராமமும், தேவாரப்பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புடைய சரித்திரப் பின்னணியைக் காய்தல், உவத்தலின்றி வரலாற்று ஆசிரியர்கள் உன்னிப்பாக அவதானித்துச் சிந்திக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புடைய வரலாறுகளெல்லாம் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தோடும் தொடர்புறுத்தப்பட்டிருக்கின்றது. ஏழாம் நூற்றாண்டில் வாழந்த திருஞானசம்பந்தர் தெட்சண கயிலாயம் எனப்படும் திருக்கோணேஸ்வரத்தைத் தேவாரப் பதிகம்பாடித் துதித்துள்ளார். கோணேசர் கல்வெட்டின் பிரகாரம் குளக்கோட்டு மன்னன் கலியப்தம் 522ஆம் ஆண்டில் கோணேசர் கோவில் திருப்பணியையும், 526ஆம் ஆண்டில் கந்தளாய்க் குளத்தைக் கட்டும் பெரும் பணியையும் செய்து நிறைவேற்றியதாக அகச்சான்றுகள் காணப்படுகின்றன. கிறீஸ்து பிறப்பதற்கு 1300 வருடங்களுக்கு முற்பட்ட திருக்கோணேசர் கோவிலுக்கு, கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் சோழ அரசனான குளக்கோட்டு மன்னன் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்துள்ளான். இந்த மன்னனால் திருக்கோணேஸ்வரத்திற்குச் செய்யப்பட்ட திருப்பணிகள்,மானியங்கள், நிபந்தங்கள், நிர்வாக ஆணைகள் யாவும் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது. இக்கல்வெட்டிலுள்ள ஆணைகள் இன்று தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் கடைபிடித்து வருகின்றது.மானியங்களை அனுபவித்து வருகின்றது. ஆதி கோணேசர் என்பதிலுள்ள "ஆதி" என்ற சொல் திருக்கோணேஸ்வரத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. போத்துக்கீசர் கோணேஸ்வரத்தில் செய்த அட்டூழியங்களே தம்பலகாமம் கோணேசர் கோவிலுக்கு "ஆதி" என்ற அடைமொழியைச் சேர்க்கக் காரணமாயிருந்தது என்று கூறலாம்.

கி.பி.1624 ஆம் ஆண்டு போத்துக்கீசத் தளபதியாகிய கொன்ஸ்டன்டைன் டிசா என்பவனும் அவனுடைய படைகளும் திருக்கோணேசர் ஆலயத்தை இடித்து அழித்தார்கள். அப்போது அங்கிருந்த பாசுபதர்களும், தொழும்பாளர்களும் ஆலயத்திலுள்ள திருவுருவங்களை எடுத்துச் சென்று கிணறு, குளங்களில் போட்டும் நிலத்தில் புதைத்தும் மறைத்திருக்கின்றார்கள். அந்தத் திருவுருவங்களில் ஒன்றைத் தம்பலகாமத்திலுள்ள சுவாமி மலையில் வைத்துப் பாதுகாத்து பராபரித்து வந்தார்கள். அந்தத் திருவுருவம் இப்பொழுதும் தம்பலகாமம் ஆதிகோண நாயகர் ஆலயத்தில் வைத்துப் பூசிக்கப்பட்டு வருகின்றது. அதன்பின்புதான் இவ்வாலயம் ஆதி கோணேசர் ஆலயமென்ற பெயரால் வழங்கி வந்துள்ளது.

6ஆம், 7ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலத்திலும், 9 முதல் 11ஆம் நூற்றாண்டுவரை சோழர் காலத்திலும், 12ஆம் 13ஆம் நூற்றாண்டில் பாண்டியர் காலத்திலும் திருக்கோணமலை, பொல்லனறுவை, அனுராதபுரம் முதலிய இடங்களிலெல்லாம் சிவாலயங்கள் சிறப்புற்றிருக்கின்றன. திருக்கோணமலை மாவட்டத்தில் திருக்கரைசை, கந்தளாய், தம்பலகாமம், தென்னமரவடி, பெரியகுளம் போன்ற இடங்களில் சிவன் கோவில்கள் இருந்து அழிந்த அழிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன.

இப்பொழுது ஆதிகோணநாயகர் ஆலயம் இருக்கும் இடத்திற்குச் சிறிது தூரத்தில் "தீனேரி" "பாண்டியூற்று" என்ற இடங்கள் இருக்கின்றன. திருநகர், என்பது திருநகரியாகிப் பின்னர் தீனேரியாகவும், பாண்டியநூற்று பாண்டியூற்றாகவும், காலப்போக்கில் திரிபுபட்டிருக்கலாம். இங்கு சிவாலயங்களிலிருந்ததற்குரிய அழிபாடுகள் கிடைத்திருக்கின்றன. இங்கிருந்த சிவலிங்கம், நந்தி என்பன பல்லாண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்டு தம்பலகாமம் கோணேசர் கோவிலில் வைக்கப்பட்டிருந்தது. இவ்வாலயத்திற்கு இராசசிங்க பாண்டியன் திருப்பணிகள் செய்ததாகவும் சரித்திர வரலாறுகள் காணப்படுகின்றன.

சோழசாம்ராச்சியம் தலை தூக்கிய காலத்தில் ஆதித்திய சோழனின் மகன் முதலாம் பராந்தகன் (கி. பி. 907 - 956) மதுரையைக் கைப்பற்றி பாண்டி நாட்டைச் சோழசாம்ராச்சியத்தோடு இணைத்தான். அவ்வேளையில் பாண்டிய மன்னனாயிருந்த இரண்டாம் இராஜசிங்கன் இலங்கை மன்னனான ஐந்தாம் காசியப்பனின் (கி. பி. 915 - 923) துணையைச் சோழருக்கெதிராக நாடினான். சோழரோடு செய்த யுத்தத்தில் தோல்வியடைந்த ராஜசிங்கன் இலங்கைக்கு ஓடி ஒளித்தான். இந்த மன்னனால் தம்பலகாமம் சிவன்கோவில் திருப்பணி நடைபெற்றிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கசீர் இலங்கை நாட்டில் விரிகதிர் பரிதியோச்சி
உக்கிரசேன சிங்கன் உதவிய சிறுவனென்னும்
மைக்கடுங் களிற்றுத் தானை வரராச சிங்க மன்னன்
புக்கு மறுநவர்கள் போற்றப் பொருவிலாவரசு செய்தான்

என்னும் திரிகோணாசல புராணச் செய்யுள் இராசசிங்க மன்னன் இலங்கையை ஆண்டதாகக் கூறுகின்றது. இந்த மன்னன் தம்பலகாமத்தில் ஆதியில் இருந்த ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்துள்ளான் குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்து வழிபட்ட கோணேசர் ஆலயத்திலிருந்து போர்த்துக்கீசருடைய கையிலகப்படாமல் மறைத்துக்கொண்டு வரப்பட்ட ஆதி கோணநாயகரை இவ்வாலயத்தில் ஸ்தாபித்து இன்றும் வழிபட்டு வருகின்றார்கள். இம் மாபெரும் கைங்கரியத்தினால் குளக்கோட்டு மன்னன் கோணேஸ்வரத்திற்கு வழங்கிய மானியங்களில் ஒரு பகுதியேனும் காப்பாற்றப்பட்டுள்ளன. ஏனைய மானியங்கள் காடுகளாகிப் பிற்காலத்தில் நாடாளுபவர் களின் குடியேற்ற நிலங்களாக விருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்ட தொழும்புப் பணிகள் தம்பலகாமத்தில் பரம்பரையாகப் பேணப்பட்டு வருகின்றன. குளக்கோடடு மன்னனால் ஆலயத் தொழும்புகளுக்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட குடிமக்களின் பரம்பரைகள் தொடர்ந்து இங்கு பணிசெய்து வருகின்றார்கள் கல்வெட்டில் கூறப்பட்ட அற்புதச் செயல்கள் இன்றும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வரத்தில் சுமார் முந்நூற்று முப்பத்தொன்பது ஆண்டுகளாக ஆலயம் இல்லாதிருந்ததினால் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்ட முக்கியமான மூன்று அம்சங்களை பேணி வரும் தம்பலகாமம் ஆதி கோணேசர் ஆலய வரலாற்றில் அவைகளைக் கூறுவது பொருத்தமாகும்.

குளக்கோட்டு மன்னனால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழும்பாளர்களில்

| | |
|---|---|
| பாசுபதர் | - ஆகம முறைப்படி பூசை செய்பவர்கள் |
| தானத்தார் | - அன்றாடம் வரும் வரவு செலவுகளைக் கணித்தல், இறைவனுக்குத் தினமும் ஆராத்தி எடுத்தல், நடனமாடுதல், பன்றிகுற்றல், முதலிய கடமைகளைச் செய்பவர்கள். |
| வரிப்பத்தார் | - பட்டாடை கொய்தல், கட்டல், புஸ்ப பத்திரமெடுத்தல், விளக்கேற்றல், கோவில் தளபாடங்களை விளக்குதல், தீர்த்தமெடுத்துக் கொடுத்தல், நெல்லுக் குத்துதல், சந்தனமரைத்துக் கொடுத்தல், கொடியேற்றல் இறக்கல், கட்டல், சுற்றல் போன்ற உட்பணிகளைச் செய்தல். |

இவர்களைத் தவிர வருடக்கணக்குகள். மானியத் தொகைகளைப் பெரிய வளமைப் பத்ததியின்படி செயற்படுத்தும் கனகசுந்தரப் பெருமாளும், எல்லோரையும், எல்லாவற்றையும் கவனித்து நடத்தும் சிற்றரசன் போன்ற தனியுண்ணாப் பூபால வன்னிமை போன்றவர்களும் குளக்கோட்டு மன்னனால் நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரிந்து வந்தார்கள். இந்தத் தொழும்புமுறை காலப்போக்கில் தானத்தார், வரிப்பத்தார் எனப்பட்டவர்கள் காரியப்பர், வயிராவியர் என்று மாறினர். இந்தப் பரம்பரையினர் தம்பலகாமம் கோணேசர் கோயிலில் பணியாற்றி வருகின்றார்கள். "அடப்பன், கங்காணம்" என்ற பணியாளர்கள் பிற்காலத்தில் தோன்றியவர்கள் இவர்களும் ஆலயப் பணிகளை மேலாளராக இருந்து செய்து வருகின்றார்கள் "அடப்பன் கங்காணம்" என்ற சொற்கள் வேறு மதத்தவர்களிடமும் பிர யோகத்திலிருந்து வருகின்றது. வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி கோவில் நிருவாகத்திலும் இந்தச் சொற்பிரயோகம் இருந்து வருகின்றது. இந்தச் சொற்களின் மூலவேர் எங்கிருந்தது என்பதை தீர்க்கமாக அறிய வேண்டும். இதன் உண்மை புலப்பட்டால் தம்பலகாமம் ஆலயத்தின் பூரண வரலாறும் தெளிவாகும்.

குளக்கோட்டு மன்னன் கோணேசர் கல்வெட்டில் கூறிய மற்றொரு ஆணையையும் தம்பலகாமம் கோணேசர் கோவில் கடைபிடித்து வருகின்றது. "மன்னு பச்சைப் பட்டுவரின் மழையுதவும், சிவப்பு மகா வெயிலே காட்டும்" என்பது அவ்வாணை. குளக்கோட்டு மன்னன் கந்தளாய்க் குளத்தைக் கட்டி மகாவலி கங்கை நீரைத் திசைதிருப்பிக் குளத்தில் விட்டிருந்தான். மகாவிஷ்ணுவின் ஆணைப்படி குளத்திற்குக் காவலாக, விநாகர் காளமாமுனி, புலத்தியர், மங்கலர், வீரபத்திரன், வதனமார், வைரவர், அண்ணமார், பலபலபூதங்கள், ஐயனார், சக்திகாவலர்கள், கன்னிமார், பத்தினி, காளி என்னும் தெய்வங்கள் இந்த குளக்கட்டில் இருத்தப்பட்டன இந்த காவல் தெய்வங்களுக்கு ஒரு வருடத்தில் மடையும், மறு வருடத்தில் வேள்வியுமாக (பொங்கல்) செய்யும் படி குளக்கோட்ட மன்னன் பணித்தான். இன்றும் அது நடைபெற்று வருகின்றது. முறைப்படி பொங்கல், வேள்விகளைச் செய்து கோணேசருக்கு நேர்த்தி வைத்து பச்சைப்பட்டு கட்டினால் மழைவருவதும், சிவப்புப்பட்டு கட்டினால் வெயில் காய்வதும் இங்கு நடைபெற்று வரும் அற்புத நிகழ்ச்சியாகும்.

திருக்குளத்து வேள்வி செய்யும் போது அனுமன், கருடன் இவர்களது துணையோடு செய்யத் தொடங்குவர். காட்டுக்குச் சென்று மாடு பிடித்துப் பால் கறந்து பொங்கல் செய்ய வேண்டுமென்பது விதி. மறிகாரர் மாடு பிடிப்பதற்கு உரிமையுடையவர்கள். கட்டாடியார் என்ற பூசாரியார் கயிறெடுத்துக்கொடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்கள் பல சொல்லி, வேண்டுதல்கள் பல செய்து, காட்டிற்குச் சென்று குளுமாடுகளைப் பிடித்துப் பாலெடுத்துப் பொங்கலிடுவார்கள். "நன்னயஞ்சேர் பாகிலையும், பாலடிசில் திருவிளக்கும் நல்ல தூபம் சொன்னபடியே கொடுப்பர்" ஆயிரம் வெற்றிலை, ஆயிரம் பாக்கு, ஆயிரம் பழம், ஆயிரம் பூ அனைத்தையும் பயபக்தியோடு படைத்து மடை போடுவார்கள் இன்றும் வருடத்திற்கொருமுறை இத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

சுவாதியம்மன் என வழங்கும் மூர்க்கமாதா என்ற தெய்வத்திற்குச் செய்யும் "ஆலடிவேள்வி" பத்தினி அம்மனுக்குச் செய்யும் "ஐயனார் வேள்வி" அண்ணமார் வேள்வி எனப் பல வேள்விகள் இங்கு நடைபெற்று வருகின்றன. இந்த வேள்விகளின் போது பலவிதமான வரலாற்றுக்காவியங்கள் பாடுவார்கள்.

கங்காணம், அடப்பன், வயிராவி, காரியப்பர், புலவன், குருக்கள், என்ற பணியாளர்களைக் கொண்ட ஓர் அறங்காவல் நிலையமாக தம்பலகாமம் கோணேசர் கோவில் இருந்து வருகின்றது. இவர்களுக்கெல்லாம் வயல் நிலங்கள் மானியமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் கீழ் இயங்கும் தர்மகர்த்தா சபையினால் தற்போது பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. கடைசியாக 1980ம் ஆண்டு தை மாதம் 28ஆம் திகதி புனருத்தாரணத் திருப்பணிகள் நிறை வேற்றி மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. வானளாவிய பஞ்சதள ராஜகோபுரத்தையுடையது ஸ்ரீ ஆதிகோணநாயகர் கோவில். தென்னஞ்சோலைகள் சூழ்ந்த இயற்கை அழகுப்பொழிவோடும் வற்றாத நீர் வளத்தினால் செந்நெற் கழனிகள் சூழ்ந்து நிறைந்த இடம் தம்பலகாமம். கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்ப மண்டபம் என்பவைகளைக் கொண்ட பெரும் கற்கோவில். உள் வீதி சுற்று மதிலால் காப்புச்செய்யப்பட்டிருக்கின்றது. கருவறையில் கிரியா லிங்கம் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கின்றது சுவாமி பெயர் - ஆதிகோணநாயகர். அம்பாள் பெயர் - அம்சகனாம்பிகை. அம்பாளுக்கு அழகிய விமானமுடைய கருவறையும் அர்த்த மண்டபமும் உடைய தனிப்பீடம் அமைக்கப்பட்டிருக் கின்றது. விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் என்பவர்களுக்குத் தனியாலயங்கள் உண்டு எல்லா ஆலயங்களுக்கும் புதிதாகத் தூபிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. புராண, இதிகாச வரலாற்றுச் சம்பவங்களை விளக்கும் அழகிய சிற்பங்கள் தூபியிலே பொறிக்கப்பட்டிருக்கின்றன. அர்த்த மண்டபத்தில் கதிர்காம சுவாமியும், அம்பாள் சந்நிதியில் அம்சகனாம்பிகையும், மகா மண்டபத்தில் சோமாஸ்கந்தர், பிள்ளையார், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் அஸ்திரதேவர், பாலம்போட்டாற்று அம்மன் என்னும் எழுந்தருளி விக்கிரகங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. பாலம்போட்டாற்றுப் பத்தினி அம்மன் கோவிலில் வருடமொருநாள் பொங்கல் பெருவிழா நடைபெற்று வருகின்றது. அன்று இவ்வாலயத் திலிருந்து பத்தினி அம்மனை எழுந்தருளச் செய்வார்கள் விழா முடிவில் மீண்டும் இங்கு கொண்டு வந்து வைத்திருப்பார்கள்.

ஸ்நபன மண்டபத்தில் சிவகாமியம்பாள் சமேத நடராஜப் பெருமான் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளார். ஆதிகோணை நாயகருக்குத் தனிக்கோவில் இருக்கின்றது. வைரவர், நாகதம்பிரான் பீடங்களும் மணிக்கோபுரமும் கொண்டதாய் சாஸ்திர ரீதியாக இவ்வாலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. வசந்த மண்டபம் தனியாக அமைக்கப்படும் முயற்சி நடை பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனி உத்தரத்தில் கொடியேற்றி பதினெட்டு நாட்கள் மகோற்சவமும், தீர்த்தோற்சவமும் நடைபெற்று வருகின்றது. ஆடியமாவாசைக்கு சுவாமி மகாவலி கங்கை முகத்துவாரத்திற்குச் சென்று தீர்த்தமாடுவார். இந்த தீர்த்த வரலாறு பற்றிய விபரத்தை ஆலங்கேணி அருள்மிகு விநாயகராலய வரலாற்றில் பார்க்கவும் மகோற்சவத்தின் போது கதிர்காமசுவாமி உற்சவமும், சூகரவேட்டைத் தூதும் இங்கு நடைபெறும் விசேடமான திருவிழாக்களாகும். கௌரி விரதம், கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, சித்திராபூரணை, திருவெம்பாவை முதலிய விசேட பூசை விழாக்களும், ஒரு நாளைக்கு மூன்று முறை நித்திய பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

> சிவசிரோன்மணி, பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் ஆக்கிய திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள் எனும் நூலிலிருந்து.

## சஞ்சிகை குழு

திரு. சி. குருநாதன் — ஆசிரியர்
திரு. கு. கோணாமலை
திரு. கா. சிவபாலன்
திரு. செ. சிவபாதசுந்தரம்
திரு. ந.. ரவீந்திரன்
திரு. சு. கனகசபாபதி
திரு. இ . முகிலன் — விநியோகப் பொறுப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தாள்!

1. குளமுண்டு — வயல்கள் உண்டு!
கோண நாயகரு முள்ளார்!
வளமுண்டு — பசுமை யுண்டு!
வாய்க்காலும் நீருமுண்டு!
அளவிலாத் திடல்களுண்டு!
அகதியா னோரு முள்ளார்.
உளதெல்லாம் நமதே என்னும்
உரிமைதான் நமக்கிங்கில்லை!

2. தம்பல "காமம்" இன்று
தம்பல "கமம்" என்றாச்சு!
எம் குறளார் தான் தந்தார்,
இனிய காமத்துப் பாலை!
நம் பழு காமம் கூட
நாட்செலக் கமம் என்றாமோ?
எம் உள விருப்பே காமம்
இதற்குமா உரிமை இல்லை?

3. மன்னவன் காலக் கோயில்
வரலாறு நூலில் உண்டு!
சொன்னதைச்சொல்லிக் காட்டச்
சொலல் வல்லார் பல்லோருள்ளார்!
தன்னேரிலாத மூத்த
தமிழையும் கலப்போருள்ளார்!
என்னவாறிருந்த போதும்
எமக்கு மண் இறைமை இல்லை!

4. கோணேசப் பெரும, கோயில்
குடமுழுக்காட்டியுள்ளோம்!
வாணாளில் படக்கூடாத
வதைகளைப் பட்டுமுள்ளோம்!
காணாத திருவிழாக்கள்
காணக்கண் துடைத்து முள்ளோம்!
வீணாகிப் போகா துண்மை
விடுதலை தந்தாள்வாயா?

"தூயவரத்தினன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பலகாமம் கோணேஸ்வரத்தின் வித்தியாசமான வழிபாட்டு முறை

சோழகங்கன் எனும் குளக்கோட்டு மன்னன் திருத்தம்பலகாமத்தில் கோணேஸ்வரர் ஆலயத்தினைக் கட்டிமுடித்துத் தொழும்பு முறைகளையும் நிரைப்படுத்திய பின், தான் அமைத்த ஆலயத்தின் வழிபாட்டுமுறை எப்படி அமைய வேண்டும் என்பது பற்றியும் சிந்தித்தான். தம்பலகாமத்தில் தான் திருத்திய வயல் வெளிகள் நன்றாக விளைந்தால்தான் ஆலய பூசை வழிபாடுகள் குறைவின்றித் தொடர்ந்து நடைபெறும். நெற்செய்கை சிறக்க ஒரு சமயம் மழையும் இன்னொரு சமயம் வெயிலும் வேண்டும். சிவாலயங்களில் மிக உயர்ந்த பிரம நிலையில் உள்ள மூர்த்தியிடம் பக்குவநிலையினை அடைந்த மனிதன் முக்திப் பேறினை கோரமுடியுமேயன்றி மழை , வெயில், பொன், பொருள் போன்ற உலகப் பொருட்களைக் கோரிப் பெறமுடியாதே என்று மன்னன் சிந்திக் கொண்டிருந்தான். அவ்வேளை அரசனின் குலகுரு மகாரிஷி அதிஸ்டவசமாக அரசனைச் சந்திப்பதற்காக அங்கு வந்தார். குருவைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்த குளக்கோட்டு மன்னன் அவர் அடிதொழுது தன்நிலையைக் கூறி நெற்செய்கையாளர் வேண்டும் போது உமாபங்கர் வெயிலையும், மழையும் அருளக்கூடிய ஒரு ஆராதனை முறையை ஆக்கிறத் தருமாறு வேண்டினான்.

"ஐய கேளடி யேனுந்தனருளினாலியற்று கின்ற செய்ய பொன்னாலயத்தில் தேவமாதவர் போற்றும் ஐயனையுமையினோடு விழிகளால் தரிசித்தோற்றி உய்ந்திட அருளையீவாய் என்றனனுவனை வென்றான்"

(திருக்கோணாசலபுராணம்)

(கோணேஸ்வரத்தின் ஸ்தல புராணங்களான திருக்கோணேஸ்வரப் புராணம் கோணேசர் கல்வெட்டுப் போன்ற நூல்கள் திருமலைக்கோணேஸ்வரம், தம்பலகாமம் கோணேஸ்வரர் பராணத்தில் தம்பலகாமம் கோணேஸ்வரம் பற்றிக் கூறும் தொகையான செய்யுள்கள் அடங்கிய "தம்பை நகர்படலம்" என்ற ஒரு அதிகாரமுள்ளது குறிப்பித்தக்கது.)

மழை, வெயிலை அருளும் ஒரு வழிபாட்டு முறையை ஆக்கித்தருமாறு கோரிய மன்னனின் வேண்டுதல் அருந்திகேள்வனைப் பல நாள் சிந்திக்க வைத்தது. மூலப்பரம்பொருளான பிரம்மம் அசையாதது, அகண்டாகரமானது, சொல் கொண்டு விளக்க முடியாதது, என்றும் பூரண பொருளாக உள்ளது. உலக காரியமாகத் தூயபிரம்மத்தின் மாயை எனும் சாயை படிய பிரம்மம் தன்மை குன்றிச் சதுர்ப்புயங் களுடன் கீழிறங்கி வருகிறான். அந்த மேலான நிலையிலும் பக்குவ நிலையடைந்த மனிதன் ஆத்ம லாபத்தைக் கோர முடியுமேயன்றி பொன், பொருள், வெயில், மழை போன்ற உலகப்பொருள்களைக் கோரிப் பெற முடியாது. என்று சாஸ்திரங்கள் இயம்பு கின்றன. ஆனால் கருணா மூர்த்தியான இறைவன் அவசியம் நேரும்போது இன்னும் கீழ் இறங்கி மனிதனாகவே அவதரித்து அருள் புரிந்திருப்பதையும் அந்த மகரிஷி எண்ணிப்பார்த்தார்.

"அன்புடனிரங்கும் வேந்தை அருந்ததி கொழுனன் நோக்கி
இன்புற ஆசிகூறி நீ எண்ணியபடியாகுமென்றான் "

(திருக்கோணாசல புராணம்)

தம்பலகாமம் க. வேலாயுதம்

என்று அரசனுக்கு இசைவு கூறி ஆகமங்களில் தலையான மகிடாமகக் கிரிகை ஆராதனைகளால் இறைவனைப் பிரதிப்படுத்தி வேண்டும் போது பட்டுச் சாத்தி கிரியை ஆராதனைகளை செய்து மழை, வெயிலைப் பெறக்கூடிய வழிபாட்டு முறையை ஆக்கிக் கொடுத்தான். எனக் கோணேஸ்வரம் பற்றிய நூல்கள் கூறுகின்றன. எனவே தம்பலகாமம் கோணேசர் ஆலய வழிபாடு ஏனைய சிவாலயங்களில் நடைபெறும் வழி பாடுகளுக்கு வித்தியாசமான முறையில் உருவ அருவ வழிபாடுகளாக இரு பிரிவாக உள்ளது. காய்ச்சலுக்கு ஒரு மருந்து, தலையிடிக்கு ஒரு மருந்து, வயிற்றுவலிக்கு வேறு ஒரு மருந்து என்று வைத்திய சாத்திரம் கூறுவது போல் கோணேஸ்வரர் வழிபாட்டிலும் சிறிய மழையை வருவிக்க, பெரிய விடா மழையை வருவிக்க, வெயிலை வருவிக்க என பலவிதமான கிரியை ஆராதனைகள் உள்ளன. கோயிலுள் நடைபெறும் பூசை அபிஷேகம், கொடியேற்று ஆண்டு விழா போன்றவை சிவனுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் நடைபெறும் உருவ வழிபாடாகும். கந்தளாய்க் குள அணைக்கட்டில் நடைபெறும் மகா வேள்வி, தம்பலகாமம் நாயன் மார்திடல் வைரத் தடியில் நடைபெறும் மடை வைபவம், கள்ளிமேட்டு ஆலையடி மைதானத்தில் நடைபெறும் பத்தினி தேவி விழா, தம்பலகாமம் கிழக்கிலுள்ள மாகாமத்தில் இடம்பெறும் மூக்காம்பிகை விழா திறந்த வெளி வழிபாட்டு இடங்களில் நாராயண மூர்த்திக்கும் காவல் தெய்வங்களுக்கும் நடைபெறும் அருவ வழிபாட்டுச் சுற்று ஆராதனைகளுக்கு உதாரணங்களாகும். ஆலய ஆண்டு கொடியேற்று உற்சவ விழாவை மையமாகக் கொண்டு மேற்காட்டிய அருவ வழிபாட்டுச் சுற்று ஆராதனை ஆண்டுக்கு ஒன்றாக நடைபெற வேண்டும்" என்ற விதிகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய ஆண்டுக் கொடியேற்ற உற்சவவிழா.

திருத்தம்பலகாமம் கோணேஸ்வர ஆலய கொடியேற்று உற்சவவிழா ஆனி உத்தர தினத்தில் கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகும். அக்காலம் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் வளர்ந்து கதிர் ஈன்று அசைந்தாடும் நெல் வயல்கள் சூழ்ந்த மருத நிலப் பிரதேசமான தம்பலகாமம் ஊர்கள் புத்தாடை அணிந்த ஆண், பெண்களால் நிறைந்து அழகாகக் காட்சி தரும். திருக்கோணமலை மாவட்டத்ததில் உள்ள கட்டுக் குளப்பற்று, தம்பலகாமப் பற்று, கொட்டியாரப் பற்று, ஆகிய மூன்று பற்றுகளிலும் பரந்து வாழும் கோயிற் தொழும்பாளர்களுக்கு அவர்கள் செய்யும் ஊழியர்களுக்கு ஏற்ற விதமாக நாற்பதேக்கர்,இருபது ஏக்கர் பத்தேக்கர், எட்டேக்கர், ஐந்தேக்கர், மூன்றேக்கர், இரண்டேக்கர், என்று அவர்கள் செய்யும் தொழும்புப் பெயர்கள் அமைந்த நெல்வயல்களை ஆலயம் மானியமாக வழங்கியுள்ளது.இவற்றுடன் மாதச்சம்பளம் பெறும் ஊழியர்களும் உள்ளனர். இவைகளைத் தவிர்த்து இருபோக நெற்செய்கைகளுக்கும் ஆயத்துக்குக் கூறிக் கொடுக்கப்படும். எழுநூறு, எண்ணூறு ஏக்கர் வரையில் நெல் வயல்களும் நூற்றுக்கணக்கான தென்னந்தோப்புகளும், பிறசெல்வங்களும் தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்ததிற்குச் சொந்தமாக உள்ளன.

இருபாக முதன்மைக்குருக்கள், தானம், வரிப்பற்று, கங்காணம், ஏவிஅடப்பன், பொன்னான கிளை அடப்பன், சிந்து நாட்டு அடப்பான், புலவன், காப்புக் கட்டி, இறைவன் முன் நர்த்தனம் செய்யும் பெண்கள், சங்கூதும் பண்டாரம், மாலைகட்டும் பண்டாரம் கொடிஎழுதும் பொற்கொல்லர், கன்னார், குயவர், கணக்கர் குளத்தில் வேள்வி செய்யும் கட்டாடி, இணைக்கட்டாடி, பத்தினித் தேவி விழாவை நடத்தும் பாட்டுவாளி, இணைப்பாட்டுவாளி, குழுமாடுபிடித்துக் கட்டும் பன்னிரு மறிகாரர், செட்டித்தொழும்பு செய்வோர், நாதஸ்வர மேளக்காரர், ராஜமேளக்காரர் ,பறைமேளக்காரர், வண்ணார், நாவிதர், நளவர், காவலர் எனத் தொழும்பாளர்கள் உள்ளனர். வயல்மானியம் பெறுவர் மாதச் சம்பளம் பெறுவர் என அனைவரையும் ஆண்டு உற்சவவிழாவில் ஊழியம் புரிவார்கள். ஆனிஉத்தர தினத்தில் தொடங்கும் உற்சவ விழாவில் சிவபிரானுக்கும் உமைக்கும் திருமண வைபவம் நடைபெறும் ஆதலால் அந்நிகழ்ச்சியைக் காணவும் இறைவழிபாடாற்றவும் மனிதர்கள் வருவது போல் அருவிகளாக தேவர்களும் பூதங்களும், பேய்களும், வருவார்கள். பேய்களும் பூதங்களும் விழாவுக்கு வருவதனால் அவர்களால் மனிதர்களுக்கு அபாயம் ஏற்படலாம் என்ற எச்சரிக்கை நோக்கில் தொடக்கம் முதல் எட்டு விழாக்களும் உள்வீதியிலே நடைபெற்று வெளி வீதி பவனி வர இருக்கும் பத்தாம் நாள் விழாவுக்கு முதல் நாள் ஒன்பதாம் நாள் விழாவன்று காவல் கிரிகைகளை அனுட்டித்து கோயில் வெளி வீதிகளில் எட்டுத்திக்குகளிலும் சந்திக் கொடிகள் நட்டு. அட்டத்திக்குகளிலும் நடப்பட்டிருக்கும் சந்திக் கொடிகளில் இந்திரன், யமன், வருணன் போன்ற அட்டத்திக்குப்பாலர்களையும் நிறுத்தி, இந்த காவல் ஒழுங்குக்குக் கட்டுப்படமறுக்கும் துஸ்ட தேவதைகளை மந்திர உட்சாசனங்களாலும், அக்கினியாலும் சுட்டுப் பொசுக்கி தொழும்பாளர் அனைவரும் கோயிலாற்றில் முழுகி சலவை செய்த வஸ்திரங்கள் உடுத்தி விழாக்கருமங்களில் ஈடுபடுவர்.

வாஸ்த சாந்தி எனும் கிரிகையை அனுஸ்டித்து வெளி வீதியில் அனுஸ்டித்து வெளிவீதியில் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட பின் செய்த பாதுகாப்பு பிழையின்றிச் சரியாக இருக்கின்றதா என்று சரி பார்க்கும் தோரணையில் விநாயகரும், அத்துற தேவரும் இருகேடகங்களில் வெளி வீதி வலம் வந்து ஒவ்வொரு சந்திக் கொடியருகிலும் நின்று சந்திக் கொடியில் காவலாக நிற்கும் தேவனுக்கும் விநாயகர் அத்துரு தேவருக்கும் பூசை வழிபாடுகள் நடைபெற்று திருவிழா நடைபெறும். இந்த விழா சந்திக் காவல் விழா என்று அழைக்கப்படுகின்றது. ஏனைய ஒன்பது விழாக்களும் வெளிவீதிப்பவனியாக மிக விமரிசையாக நடைபெறும். பத்தாம் நாள் விழாவன்று சண்முகன் உமாசமேதரான சோமஸ்கந்த மூர்த்தி பரிவார தெய்வங்களுடன் சப்பரத்தில் வெளிவீதிப் பவனி வருவார். சந்திக்காவல் விழாவன்று வெளிவந்த விநாயகர். அத்துரு தேவர் கேடகங்கள் சப்பரத்துக்கு முன்னால் சந்திக்கொடியடி சென்றதும் தீவெட்டி ஏந்திய தொழும்பாளர்களும். நர்த்தனம் ஆடும் மாணிக்கம் என்னும் பெண்ணும், புலவர், ராஜமேளக்காரர் போன்ற தொழும்பாளர்களும் சந்திக் கொடியண்டை சென்று கொடியடியில் காவல் நிற்கும் திக்குப்பாலகர்களுக்கும், கேடகங்களிலுள்ள கடவுள்களுக்கும் பூசை செய்வார்கள். திருஞானசம்பந்தர் கோணேஸ்வரர் மீது பாடிய பதிகப்பாடல்களை புலவர் பண்ணிசைத்துப்பாட மாணிக்கம் என வந்த பெண் தொழும்பாளர் அபிநயம் பிடிப்பது போல் பாவனை செய்வார். பின் தொழும்பாளர் குழு சப்பிரம் நிற்கும் இடத்திற்குத் திரும்பி சப்பரத்தில் எழுந்தருளி இருக்கம் கடவுளர்களுக்குக் குருக்கள் பூசை செய்வார். புலவர் பதிகம் பாடுவதும் மாணிக்கம் நர்த்தனம் செய்வது போன்ற பாவனை நிகழ்சிகளும் நடைபெறும். இப்படியே ஒவ்வொரு சந்திக் கொடியிலும் நின்று பூசைநடைபெற்று திருவிழா நடைபெறும்.

பதின் மூன்றாம் நாள் விழாவன்று கோணேஸ்வரப் பெருமான் வெளி வீதிப் பவனி வருவார். பதின்நான்காம் நாள் விழாவன்று கதிர் காமத்தில் நடைபெறுவதைப் போல் முருகக் கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெட்டியில் இரகசியமாகத் தேருக்கு எழுந்தருளிக் கேடகங்களுக்கு முன் செல்வார். இப்போது முன்னே கதிர்காம சுவாமியின் தேர், அடுத்து விநாயகர், அத்துரு தேவர் அமர்ந்துள்ள கேடகங்கள் அடுத்து கோணநாயகர் பரிவாரத் தெய்வங்கள் அமர்ந்துள்ள சப்பிரம் எனத்திருவிழாவில் பவனி வரும் தெய்வங்கள் என மூன்று பகுதிகளாகப் பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பதினாறாம் விழாவன்று சுப்பிரமணிய சுவாமி வெளிவீதி பவனி வருவார். பதினெட்டாம் விழாவன்று திருச்சூகரத் திரு வேட்டை தூது பேசுதல் போன்ற வைபவங்களுடன் ஆண்டுக் கொடியேற்ற உற்சவவிழா நிறைவு பெறும். இவ் விழாக்களுக்கு திருகோணமலை மாவட்டத்திலுள்ள எல்லா உயிர்களிலும் இருந்தும் மக்கள் கூட்டமாக கும்பத்துடன் வந்து குவிவார்கள். மார்கழித் திருவாதிரை விழாக்களாகப் பத்துப் பகல் திருவிழாக்கள் நடைபெறும். கந்தர் சஸ்டி விரத அனுஸ்டிப்பு சூரசம்காரவிழா; கார்த்திகை விழா; சிவன்ராத்திரி விழா; கேதாரி அம்மன் விரத அனுஸ்டிப்பு; போன்றவைகள் அந்த ஆலயத்ததில் நடைபெறும். உருவ வழிபாடான ஆண்டு உற்சவ விழாவை மையமாகக் கொண்டு அருவ வழிபாட்டுச் சுற்று ஆராதனைகளான வேள்வி, மடை போன்றவை ஆண்டுக் கொன்றாக நடைபெற வேண்டும் என்ற நியமம் இன்றும் தம்பலகாமம் கோணேஸ்வரத்தில் உண்டு.

## சிவன் விரதங்கள்

1. கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளில் கைக் கொண்டு; பின் தொடர்ந்து ஒவ்வொருதிங்கட் கிழமையும் இருப்பது.
2. மார்கழி திரு ஆதிரை நாளில் மேற்கொண்டு; பின் மாதம் தோறும் வரும் திரு ஆதிரை நாளில் இருப்பது.
3. உமா மகேஸ்வர விரதம்; கார்த்திகை மாதம் பௌர்ணமியில் கைக்கொண்டு பின்வரும் எல்லாப் பௌர்ணமி நாட்களிலும் இருப்பது.
4. மாசி; தேய்பிறை சதுர்த்தசி (சிவாராதிதிரி)யில் தொடங்கி ஒவ்வொரு மாதசிவாராத்திரியிலும் மேற் கொள்வது.
5. கேதாரேஸ்வர விரதம்- புரட்டாதி வளர்பிறை அட்டமி முதல் ஐப்பசி அமாவாசை வரை இருப்பது.
6. பங்குனி உத்தர நாளில் திருமண விரதம் கடைப்பிடிப்பது.
7. தை; சதுர்த்தசியில் பாசுபத விரதம் இருப்பது.
8. வைகாசி வளர்பிறை அட்டமியில் அட்டமி விரதம் இருப்பது.

*தருவது: சிசு*

## குளக்கோட்டன் கண்ட கோணேஸ்வரம் மீண்டும் உருவாக வேண்டும்

ஆகம நூல் கூற்றின் பெரும் வழிபாட்டி லிருந்து தெய்வ உருவங்கள், ஆலயங்கள் என்பன சிதைந்தால் அங்கு வாழ்கின்ற மக்களுக்குப் பெரும் துன்பங்கள் ஏற்படும் என்று கூறப்படுகின்றது.

அவ்வூர் மிகவும் பின் தங்கி மக்கள் துன்ப துயரங்களுக்கு ஆளாகி ஏழ்மை நிலையில் இருப்பதற்கு இதுவே காரணம் என்று நம்புகின்றார்கள். நம்பிக்கை வீண் போவதில்லை.

தொன்மை வாய்ந்த ஆலயங்கள், அங்கு வழிபட்டு வந்த திருவுருவங்கள் என்பன முழுமையாகத் திருப்பணி செய்யப்பட்டு சீரமைக்கப்படும் போது உலகம் முழுவதும் ஷேமமாயிருக்கும் என்கிறது சங்கராச்சாரிய சுவாமிகளுடைய கருணை உள்ளம்.

இதனைக் கருத்திற் கொண்டு கோணேஸ்வர ஆலயமும் திருவுருவங்களும் பேணப்பட வேண்டும்.

இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துக்களும் எதிர் காலச்சந்ததியும் கோணேஸ்வரத்தின் தொன்மையையும், தெய்வீகச் சிறப்பையும் ஆழ்ந்து சிந்தித்து திரிகரண சுத்தியோடு தொண்டாற்ற முன் வரவேண்டும்.

மதவெறி கொண்டவர்களின் செயற்பாட்டி ற்கு இந்துக்கள் இடமளிக்கக்கூடாது.

திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றை முன்னெடுத்துச் சென்று குளக்கோட்டு மன்னன் காலத்திலிருந்த கோணேஸ்வரத்தை மீண்டும் உருவாக்க வேண்டும்.

"நின்றுணும் சமணும் இருந்துணும் தேரும் நெறியல்லாதன புறங்கூற" என்று திருக்கோணேஸ் வரத்திருப்பதிகத்தில் கூறப்பட்டுள்ள திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் திருவாக்கின் உட்பொருளை உணர்ந்து சைவ உலகம் செயல்பட வேண்டும்.

ஞான சிரோன்மணி பண்டிதர்
**இ. வடிவேல் அவர்களின்**
திருக்கோணேஸ்வரம்
தொன்மையும் வண்மையும்
என்ற ஆய்வு நூலிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணணத் தேவனே போற்றி

அரகர சிவனே போற்றி!
அடைக்கலம் அருள்வாய் போற்றி
திரிபுரம் எரித்தாய் போற்றி
திகழொளிப் பிளம்பே போற்றி!
வரமருள் முகத்தாய் போற்றி
வாசகன் பாசம் நீங்கக்
குருமணி யாக வந்து
கோகழி ஆண்டாய் போற்றி!

ஆலயத் தமர்ந்து பூசை
அனுதினம் ஏற்பாய் போற்றி!
மூலமாய் நின்ற சோதி
முக்கணா முதல்வா போற்றி
மாலயன் தேட நின்ற
மாபெருந் தேவா போற்றி!
காலனைக் காலால் மாய்த்த
கடவுளே போற்றி போற்றி!

இனியவர்க் கினியாய் போற்றி
இன்பமே அமுதே போற்றி!
கனியினுட் சுவையே போற்றி!
கண்ணினுள் மணியே போற்றி!
நினைவினுள் ஊறி நின்று
நித்தமும் உன்னை ஏத்தக்
கனவிலும் மறவா வண்ணம்
காத்தருள் சிவமே போற்றி!

ஈசனே பாசம் மூன்றும்
இரிந்திட அருள்வாய் போற்றி!
வாசமா மலர்கள் வைத்து
வணங்கிடும் அடியார் போற்றி
நேசனே நிமலா போற்றி!
நித்தியப் பொருளே போற்றி!
பேசுதற் கரியாய் போற்றி!
பிஞ்ஞகா போற்றி போற்றி!

உம்பருக் கரியாய் போற்றி!
உமையவள் பாகா போற்றி!
நம்புவார் உள்ளே நின்று
நடம்புரி நாதா போற்றி!
அம்பலத் தரசே போற்றி!
அருட்பெருஞ் சுடரே போற்றி!
தம்பல காமத்துள் வாழ்
தனிப்பரம் பொருளே போற்றி

ஊனினை உருக்கி என்னை
உள்ளொளி காண வைப்பாய்!
தேனினைச் சொரிவாய் அன்பில்
திளைத்திட வைப்பாய் என்றும்
பாலினைந் தாட்டும் தாயின்
பரிவினும் மிக்காய் துள்ளும்
மானினைக் கையில் ஏந்தி
மகிழ்நடங் கொண்டாய் போற்றி!

எண்ணிய பொருள்க ளெல்லாம்
எளிதில்வந் தெய்த வைப்பாய்!
கண்ணுதற் பெருமான் நின்னைக்
காதல்கொண் டிறைஞ்சி நிற்கும்
விண்ணவர்க் கிரங்கி நஞ்சை
விழுங்கியே மிடற்றில் வைத்தாய்!
மண்ணவர்க் காக இங்கே
மகிழ்ந்திடம் கொண்டாய் போற்றி!

ஏரணி குலங்கள் போற்றும்
ஈசனே போற்றி! போற்றி!
நீரணி வயல்கள் சூழ
நின்றவா போற்றி! போற்றி!
தாரணி புகழும் எங்கள்
தம்பல காமத் தாரின்
சீரணி விளங்கச் செய்யும்
சிவபெரு மானே போற்றி!

ஐயுறு வார்க்கும் உன்றன்
அருள்சுரந் திடுமே ஐயா!
பொய்யரும் உன்னை - யன்றிப்
புகலிடம் பிறிது காணார்
உய்யவுன் னருளை வேண்டி
உற்றவர் எவர்க்கும் ஈவாய்!
கையகம் கூப்பி நின்றேன்
காத்தருள் சிவனே போற்றி!

ஒன்பது கிரகந் தன்னால்
உறுமிடர் தவிர்ப்பாய் போற்றி!
துன்பமும் வருமோ உன்னைத்
துதிப்பவர் தமக்கு மையா?
நின்பதம் வழுத்து வாரின்
நெஞ்சமே இடமாக் கொண்ட
தம்பல காமத் தார்நேர்
தாண்டவா போற்றி போற்றி!

ஓடுடன் பொன்னும் வாழ்வில்
ஒக்கவே நோக்கும் அன்பர்
சூடிடும் கமலப் பாதா
சொர்ணமா மன்றுள் நின்று
ஆடிடும் அழகா கங்கை
ஆறணி சடையா போற்றி!
தேடரும் பொருளே மக்கள்
தெய்வமே போற்றி போற்றி!


ஒளவுடன் சௌவு மானாய்!
ஐந்தெழுத் துருவு மானாய்!
செல்விதழ்க் கமலம் பூத்துச்
செய்யெலாம் அழகு சொட்டத்
தைவருந் தென்றல் சூழந்
தம்பல காமத் துள்வாழ்
தெய்வமும் ஆனாய் கோணைத்
தேவனே போற்றி போற்றி!

**கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரனார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூல லிங்கத்துக்கான கும்பாபிஷேகத்தை பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் நடத்தி வைக்கின்றார்



ஹம்ஸனாம்பிகை அம்பாள் அலங்கார புஜிதையாக அருள்பாலிக்கும் அருட்காட்சி




பிரதான கும்பங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் காட்சி




20 - 08 - 1980 ஆதி கோணநாயகர் ஆலய கும்பாபிஷேக எண்ணெய்க்காப்பு வைபவம் நடைபெற்ற பொழுது திரு. எம். கே. செல்வராசா (கௌரவகாரியதரிசி) எண்ணெய்க்காப்பு சாத்தும் பொழுது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தம்பலகமம் ஆதிகோணநாயகராலயத்தின் கும்பாபிஷேக காட்சிகள்




ஆதிகோணநாயகராலய மூலஸ்தான பின் கோபுரத்தின் அழகிய தோற்றம்



ஆதிகோணநாயகராலயத்தின் ஒரு பக்கத் தோற்றம்



ஆதி மூல லிங்கம்



ஹம்சனாம்பிகை சமேத ஆதிகோணநாயக பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக நிறைவில் பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ கா. சர்வேஸ்வரக் குருக்கள் அருளுரை ஆற்றுகின்றார். திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம குருவும், ஆதின கர்த்தாவுமான வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்களுடன் ஏனைய சிவாச்சார்யர்களும் காணப்படுகின்றனர்.



கும்பாபிஷேக வைபவத்தில் பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் உரையாற்றுகிறார் ஆதிகோணநாயக பரிபாலன சபைத் தலைவர் திரு. கா. சிவசுப்பிரமணியம் செயலாளர் திரு. மு. கோ. செல்வராசா பொருளாளர். திரு. தங்கராசா ஆகியோரும் காணப்படுகின்றனர்.



அன்பு இல்லக் குழந்தைகளின் பஜனை நடைபெறுகின்றது. கும்பாபிஷேகத்தை நடத்திய பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ. சர்வேஸ்வரக் குருக்களும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. கா. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



இவ்வாண்டு கும்பாபிஷேக வைபவத்தின் போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் எண்ணெய்க்காப்பு வைபவத்தில் கலந்து கொண்டார்கள். குழந்தை ஒன்று எண்ணெய்க்காப்பு சாத்துவதை படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தம்பலகாமம் உறை கோணேசா

நெல்வளம் நீர்வளம் நிலவளம் சூழ
நெடிதுயர் கோபுரம் நிலைபெறப் பெற்று
தொல்லைக ளகற்றி தொழுபவர்க் கெல்லாம்
தோன்றாத் துணையாய் அமர்ந்திருப் பவனே
எல்லையில்லாத இன்பங்கள் ஈந்து
எமையெலாங் காக்கும் எம்பெருமானே
தில்லையிலாடி திருமலை யமர்ந்தோன்
தம்பல காமம் உறை கோணேசா!

பூவிலும் மெல்லிய பூங்கொடி யாளை
புனிதமாய் பாகமாய் தம்முடன் சேர்த்து
கோவிலுஞ் சுனையும் கோட்டமாய் அமைந்த
கோணேச ரருள் தம்பலகாமம்
நாவினில் சொல்ல அவன் பெருநாமம்
நலமெலாம் பெருகும் நன்மைகளோங்கும்
தாவிடும் மயிலும் தழைத்திடும் பயிரும்
தம்பகாமம் உறை கோணேசா!

அழித்திட வென்று ஆயுதத் தோடு
அன்று முதலாம் இன்று வரைக்கும்
பழித்திடு வோர்கள் பலமாய் சிதைக்க
பாரினில் நீயும் பலமாய் ஓங்கி
அளித்திடு வாயருள் நம்மவர்க்கெல்லாம்
அன்பர்களுன்னை அனுதினந் துதிக்க
தளிர்த்திடு மவர்தம் தானியப் பயிர்கள்
தம்பல காமம் உறை கோணேசா

கெ. தர்ம குலராசா, நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை விலங்கு

ஆர்வி

குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தூங்க வைக்கின்றாள் தாய் குழந்தை அழுகிறது. அழுகையை மாற்ற தாயின் கருணை உள்ளம் தவிக்கின்றது. குழந்தையைப் பிரீதிப்படுத்துவதற்காக தாயானவள் குழந்தையின் விருப்பத்தையே கேட்பது போன்ற தாலாட்டுப் பாடலைத் தாய் பாடுகிறாள்.

*'கடிந்தாரைச் சொல்லியழு*
*கைவிலங்கு போட்டு வைப்போம்*
*தொட்டாரைச் சொல்லியழு*
*தோள்விலங்கு போட்டு வைப்போம்'*

என்று தனது அன்புக் குழந்தையை துன்புறுத்துகிறவருக்கு கைவிலங்கும் கால் விலங்கும் போடப்புகும் தாய் போல முருகனும் பிரம்மனுக்குக் கால் விலங்கும், கைவிலங்கும் போட்ட வரலாற்றை அருணகிரிநாதர் கந்தரலங்காரத்திலே பாடியுள்ளார்.

இந்தக் காட்சி தோன்றியதோ என்னவோ தெரியாது, அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய கந்தரலங்காரத்தில் அற்புதாமான பாட்டொன்று வருகிறது.

**பங்கேருகன் எனைப்பட்டோலையிலிடப் பண்டுதலை**
**தன்காலில் இட்டது அறிந்திலனோ தனிவேல் எடுத்துப்**
**பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்**
**எங்கோன் அறியின் இனி நான்முகனுக்கு இருவிலங்கே.**

பங்கேருகன் - பிரமதேவன், பட்டோலை - கணக்கெழுதும் ஓலை, தளை - விலங்கு, பொங்கோதம் - பொங்கும் கடல் - வாய்விட- அலற, பொன்னஞ்சிலம்பு - பொன்மயமான கிரவுஞ்சமலை கருணா மூர்த்தியாகிய கயிலாச நாதனை தரிசிப்பதற் காகச் சென்று கொண்டிருந்த பிரம்ம தேவன் முருகப் பெருமானைப் பார்த்து வணங்கி மரியாதை செய்யாமல் மேலே நடந்த போது பிரம்மனுடைய அகங்காரத்தை அடக்கத் திருவுளங் கொண்ட முருகன் பிரம்மனை அழைத்து விசாரித்து பிரணவத்திற்கு பொருள் கேட்டார். படைத்தல் தொழிலுக்கு அதிகாரியாய் இருக்கும் பிரம்ம தேவன் பிரணவத்தின் பொருளறியா மல் விழித்தான். பிரணவத்தின் பொருள் தெரியாமல் படைத்தல் தொழில் செய்வதா? என்று பிரம்மனுடைய சிரசிற் குட்டித் தன்னை மதியாமல் கடந்து மேலே நடந்த பிரம்மனுடைய காலுக்கு விலங்கிட்டுச் சிறையிட்ட வரலாறு கந்தபுராணத்தில் விரிவாகப் பேசப்படுகிறது.

சிவபெருமானுடைய பெருங்கருணையினால் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிரம்மன் தொடர்ந்து படைத்தல் தொழிலைச் செய்து வருகிறான்.

எத்தனையோ காலமாயிற்று இந்த நான்முகன் பதவியேற்று. தினமும் பொழுது விடிந்தால் ஆன்மாக்களை உடம்பெனும் சிறையில் போட்டு பிராரத்துவ வினைப்பயனின் படி அவரவர்கள் தலையில் எழுதும் உத்தியோகத்தை செய்து வருகிறான்.

ஒரு முகத்தைப் போல் ஒரு முகம் இருப்பதில்லை ஒருவன் வாழ்க்கையைப் போல் மற்றொருவன் வாழ்க்கை அமைவதில்லை ஒவ்வொன்றும் வெவ்வேறு விதம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அவன் செய்து வரும் கிருஷ்டிகள் அத்தனையும் ஒன்று போல இல்லை. எல்லாம் வெவ்வேறு வகை வெவ்வேறு உருவம் இவ்வாறு படைத்தல் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான் பிரம்ம தேவன்.

கணக்குப் பட்டோலையை எடுத்துப் பார்க்கிறான் அன்று புதுக்கணக்குப் போடும் சந்தர்ப்பம் எந்தெந்த உயிரை எப்படி எப்படி பிறக்கச் செய்கின்றது என்று யோசிக்கிறான். அந்தந்த உயிர் களின் பூர்வஜன்ம சரித்திரத்தை எடுத்துப் பார்க்கின் றான். பழங்கணக்குகளைப் பார்த்து அடுத்தபடி என்ன பிறப்பு அளிப்பதென்று யோசித்து யோசித்து தனித் தனியே அந்த முடிவுகளைப் பட்டோலையில் எழுதிக் கொள்கிறான்.

இவன் கோவில் தர்மச் சொத்தை கொள்ளை யடித்தவன் சரி இவனை வௌவாலாகப் பிறக்கச் செய்ய வேண்டும். இவன் தர்மம் செய்கிறவனை செய்யாதே என்று தடுத்தவன். இவனை கூழங்கையனா கப் பிறக்கச் செய்ய வேண்டும். இவன் நல்லவர்களை கடுமையான சொற்கள் கூறிக் கண்ணீர் விடச் செய்தவன் இவனுக்கு ஊமைப்பிறப்பைக் கொடுப்போம் இவன் சிவச்சொத்தை விழுங்கியவன் இவனை ஆமையாக பிறக்கச் செய்வோம். இவன் ஆலயத்தில் திருமுறை ஓதிக்கொண்டிருந்தவனை இங்கிருந்து படிக்காதே வெளியே போ என்று துரத்தியவன் இவனை நரியாக பிறக்கச் செய்வோம். இப்படியாக கணக்குப் போட்டு முடிவு கட்டுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவன் பட்டோலையில் புதிய பிறவி கொடுக்கப் பதிந்த ஜீவன்களுள் ஒரு ஜீவன் பூவுலகத்திலுள்ள ஒருவன் அவன் பல பாவங்களைப் பண்ணியவன் என்று சொல்வதற்கில்லை, புண்ணியங் களையும் செய்திருக்கின்றான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் முருகனை நம்பி வாழ்ந்திருக்கின்றான். முருகன் அடியார் கூட்டத்தில் ஒருவனாக இருந்து வாழ்நாளைப் போக்கியிருக்கிறான். ஆலயங்களில் திருமுறை ஓதுவதை யக்ஞமாகக் கொண்டவன் ஆடும் பரிவேல் அணி சேவலென முருகனைப் பாடும் பணியே பணியாகக் கொண்டவன்.

நான் முகன் அவசரத்தில் அவனுக்கு மறுபிறவி ஒன்றைக் கொடுத்து விட்டான். முருகனுடைய அடியார்களுக்கு மறு பிறவி இல்லை. அவர்களுடைய பாவ புண்ணியங்களைக் கணக்கெடுத்து தீர்மானம் செய்யும் அதிகாரம் நான் முகனுக்கு இல்லை. பிரம்மாவின் பட்டோலையில் முருகன் அடியார் களுடைய பெயரே காணக்கூடாது. அவன் அவர்களுடைய பெயரை பயபக்தியோடு உச்சரித்து உருகலாமேயொழிய மறு பிறவி கொடுக்கும் தீர்மானம் எடுப்பதற்கு நான்முகனுக்கு அதிகாரம் இல்லை. ஏதோ போதாத வேளை அப்படிச் செய்துவிட்டான். எல்லாமறியும் சர்வஞ்ஞனான முருகனுக்கு இந்தச் செய்து தெரிந்து விடுகிறது. அடியார் துயரை தொடைப்பவன் முருகன் நம்மை அவமதித்து முன்னாளில் அவன் பெற்ற தண்டனையை மறந்து விட்டான் போலும் நமக்குச் செய்யும் அவமானத்தை நாம் பொறுத்தாலும் பொறுப்போம் நம் அடியார்க்குச் செய்வதை கண நேரமும் பொறுக்கமாட்டோம்.

ஆரங்கே? என்று அழைத்தான் முருகன் லெட்ச வீரர்களுள் ஒருவன் கை கட்டி வாய்பொத்தி வந்து நின்றான் அந்த நான்முகனை இங்கே இழுத்து வா நம்முடைய அடியவன் ஒருவனைப் பிறப்பெடுக்கும் கூட்டத்தாரிலே சேர்த்துப் பட்டோலையில் எழுதியிருக் கிறான் சீக்கிரம் போய் இழுத்து வா என்று உத்தரவிட்டான் எம்பெருமான்.

வீரன் ஓடினான் சத்தியலோகத்திற்கு போய் பிரம்மதேவன் முன்னே படபடப்போடு நின்றான் விஷயம் புரியாத நான்முகன் என்ன விஷயம் என்று வினயத் தோடு கேட்டான். எழுந்திரு உனது கணக்குப் பட்டோலையை அந்த ஓம குண்டத்திலே போட்டு பொசுக்கு வா என்னுடன் என்ன செய்தி? எங்கேவர வேண்டும். என்று நடுங்கிக் கொண்டே கேட்டான் நான் முகன்.

அங்கே தான் அன்றைக்கு உன் காலில் விலங்கு போட்டு தலையில் குட்டி சிறையில் அடைத்தாரே அவரிடந்தான். அதெல்லாம் இப்போது மறந்து விட்டது போலும் புறப்படு. எங்கள் பெருமானை அவமதித்து பட்ட துன்பம் உனக்குத் தெரியுந்தானே அடியார்களைப் பாதுகாக்கும் வேலையைத் தொண்டாகப் பூண்ட பெருமான் குமரக்கடவுள் என்பதை பெருமான் நீ அறியாயோ? அவர் கையில் உள்ள வேல் சாமான்யமானதா? அது தனிச் சிறப்புள்ள வேல். கிரவுஞ்சகிரியைத் துளைத்த வேல். அந்த வேலைக் கையிலேந்திய எமது பெருமானுக்கு உன்னுடைய காரியம் தெரிந்து விட்டது. நீ எப்படி முருகன் அடியார் பெயரைக் கணக்குப் பட்டோலையில் எழுதலாம்?

ஐயோ! அவசரத்தில் எந்த மகானுபா வனையோ பிறக்கிறவர்கள் வரிசையிலே சேர்த்து விட்டேன் போலிருக்கிறது. என்று நினைத்துச் சோபை யிழந்த முகத்தோடு முருகப் பெருமானுடைய சந்நிதியில் வந்து நின்றான் பிரம்மன்

ஏ பிரம்ம தேவா! நம்முடைய அடியார்களிடம் உன்னுடைய கைவரிசையைக் காட்டக் கூடாதென்பது உனக்குத் தெரியாதா? ஏன் இன்று எனது அடியவனை உன் பட்டோலையில் எழுதினாய்? என்னுடைய சந்நிதிக்கு வந்து திருமுறைத் தொண்டு செய்பவர்கள் எனது அடியார்கள் என்பதை அறியாயா?

*'விளக்கினார் பெற்ற இன்பம் மெழுகினாற் பதிற்றியாகும்*
*துளக்கி நன்மலர் தொடுத்தால் தூய விண்ணேறலாகும்*
*விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானமாகும்*
*அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே'*

இறைவன் சந்நிதியை கூட்டிப்பெருக்கி மெழுகிட்டு கழுவுதலும், மாலை தொடுத்தலும், விளக்கிடுதலும் அளப்பரிய கீதங்கள் ஓதுவதும் ஒன்றைவிட மற்றொன்று மேலான பேறுடையன. இத்தகைய தொண்டர்களை அவமதிப்பது பாவம் இவர்கள் எல்லாம் நமது அடியார்கள். இவர்கள் உன்னுடைய கணக்குப் பட்டோலையில் இடம்பெறக் கூடாது அவர்களுக்கு நாமே அருள்புரிந்து கொண்டிருக்கின் றோம்.

சுவாமி! அவசரத்தில் அறியாமல் செய்த தாக இருக்கும் அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டும். பொறுப்பதாவது இப்படியே விட்டுவிட்டால் உனக்கு நினைவு வராது. இப்போது உனக்குக் கொடுக்கும் தண்டனை உன் ஞாபகத்தில் இருக்க வேண்டும் அப்போதுதான் மறுமுறை இத்தகைய தவறு செய்ய மாட்டாய்

வீரனே! கொண்டுவா விலங்குகளை, போன தடவை நம்மை அவமதித்ததற்காக இவனுக்குக் காலில் விலங்கு போட்டோம். நமக்குச் செய்யும் அபசாரத்தை விட நமது அடியார்க்குச் செய்யும் அபசாரம் இரண்டு பங்கு தண்டனைக்குரியது என்று கொள்ளட்டும். காலுக்கு ஒரு விலங்கும், பட்டோலையில் எழுதிய கைக்கு ஒரு விலங்குமாக பிரம்மதேவன் இரட்டை விலங்கு பூண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு தம்பலகாமம்

ஸ்ரீ ஹம்ச கமனாம்பிகா சமேத
ஸ்ரீ ஆதி கோணநாயக சுவாமி
திருவூஞ்சல்

இயற்றியவர்
"இயலிசை வாரிதி"
"ஸாஹித்ய சிரோமணி"
யாழ்ப்பாணம்
**பிரம்மஸ்ரீ . என் . வீரமணி** ஐயர்

## காப்பு

செந்நெல்லும் கழனிதரு செல்வம் ஓங்கிச்
செழுங்கலைகள் கல்வியொடு செழிந்தே வாழும்
நன்னகர்ஈ முக்கோண மலையின் பாங்கே
நயஞ்சேரும் தம்பலகா மத்தில் மேவி
அன்னமெனும் மென்னடையாள் அழகியோடு
அமர்ந்து ஆதி கோணநா யகனார்ஆட
இன்னமுதாம் தமிழூஞ்சல் இனிதே பாட
ஏரம்பக் கணபதிதாள் காப்ப தாமே.

## நூல்

சீரோங்கு சுருதிநாற் கால்க ளாகச்
சிவாகமமே நல்வயிர விட்டம் ஆகத்
தாரோங்கு கலைஞானம் கயிற தாகத்
தண்ணருளாம் ஓங்காரம் பீட மாகப்
பாரோங்கும் பைந்தமிழில் ஊஞ்சல் வைகிப்
பார்வதியாம் அன்னநடை அழகி யோடு
ஊரோங்கு தம்பலகா மத்தின் ஆதி
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

புந்தியிலே பக்தியெனும் கால் நிறுத்திப்
புலனைந்தைச் சேர்த்தொன்றாய் விட்டமாக்கி
வந்திடுநாற் கரணங்கள் வடங்க ளாக்கி
வளமார்ந்த திருவருளாம் பலகை தேக்கி
அந்தமிலாச் சீவனவன் இனிதே ஆட
அன்னநடை அழகியொடு அருளும் தேவா!
கொந்தவிழ்பூந் தம்பலகா மத்தில் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

பாதிமதி புனலரவு ஆட ஆடப்
பரந்துவிரித் திலங்குசடை ஆட ஆட
காதிலணி குழைதோடு ஆட ஆட
கரமணிமான் மழுவனலும் ஆட ஆட
ஓதிமத்தின் நடையழகி ஆட ஆட
ஓங்காரப் பிரணவமும் ஆட ஆட
ஓதிலரும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

நூலாட நுதலாட நீறும் ஆட
நுண்கலைகள் பண்கமழும் துடியும் ஆட
மாலாட மறையாட மதனும் ஆட
மலர்த்தொடையுந்த லைமா லை ஆரம் ஆட
வேலாட விழியாட விசும்பும் ஆட
விண்ணோரும் மண்ணோரும் வியந்தே ஆட
சேலாடும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

வேதனொடு வாணியுமோர் வடந்தொட் டாட்ட
விஷ்ணுவொடு லக்குமியோர் வடந்தொட் டாட்ட
காதலுடன் சிவகணமோர் வடந்தொட் டாட்ட
களித்துருகும் அடியரொடு வடந்தொட் டாட்ட
ஓதிமத்தின் நடையழகி ஒய்யாரத் தோடு
ஊஞ்சலிலே அமர்ந்திருந்து ஓரக்கண் மாந்தி
கோதவிழும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

எழிற்கோட்டு மென்மு லையாள் ஏக னோடு
என்றென்றும் குலவிமகிழ்ந் தருளைச் செய்ய
குளக்கோட்டு மன்னனவன் கோவில் செய்தே
கும்பிடவே முத்தியதைக் கொடுத்த தேவா!
வழகோட்டுப் பண்பாட்டின் வம்சம் வாழ
வரைந்தேகல் வெட்டுக்கள் அருளும் சீலா
குழைத்தோட்டுத் தம்பல காமத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

வேந்தனவன் இராவணனும் வேகம் கொண்டே
விறல்வீரத் தோள்களினால் மலையைத் தூக்கப்
பூந்தளிரின் பாதத்தின் விரலும் ஊன்றிப்
புவிஅரசன் அகந்தைதனைத் தொலைத்த வீரா!
கூந்தல் கமழ் ஓதிமமென் நடையாளோடு
குலவிமகிழ்ந் தருளதனைச் செய்யும் நாதா!
காந்தள்மலி தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறுவெண் குடையேந்த ஆல வட்டம்
ஞாலமதில் சந்திரனாம் திங்கள் தூக்க
மாயிமக மாரிஅன்ன நடையாள் செவ்வாய்
மலர்ந்தன்பு தன்னாலே புளகம் எய்த
தேயுடன் கண்டமதில் வியாழன் பூண்டு
திகழ்வெள்ளிப் பனிமலையில் ஆசனிக்கும்
கோயிலுறை தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

கற்றை முடி மண்சுமந்த களைப்பும் தீரக்
காவலனால் அடிபட்ட நோவும் ஆற
உற்றசக சுந்தரன்சொற் பித்தம் நீங்க
உதைத்தேகண் அப்பிய அவ்வலியும் மாற
குற்றவிட மள்ளியுண்ட கண்டம் தேற
கோதைக்குந் தூதான கால்கள் ஆற
கொற்றவனே தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

தத்துவத்தின் தத்துவனே ஆடீர் ஊஞ்சல்
தயாபரனே உமாபதியே ஆடீர் ஊஞ்சல்
அத்துவிதங் கடந்தவனே ஆடீர் ஊஞ்சல்
ஆனந்த மெய்ப்பொருளே ஆடீர் ஊஞ்சல்
சத்துசித்து ஆனவனே ஆடீர் ஊஞ்சல்
சச்சிதா னத்தமயா ஆடீர் ஊஞ்சல்
கொத்து மலர்த் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமிஆடீர் ஊஞ்சல்.

## வாழி

அந்தணரும் வானவரும் ஆனும் வாழி
அருமாரி அரசன் செங் கோலும் வாழி
செந்தமிழின் பண்பினொடு சீரும் வாழி
செப்பரிய கற்புநிலை சிறந்து வாழி
அந்தமிலாச் சைவநெறி வாழி வாழி
அன்னநடைச் சிற்றிடையாள் வாழி வாழி
கந்தமலர்த் தம்பலகா மத்தில் ஆதிக்
கோணநா யகஸ்வாமி வாழி வாழி !

## அனைவருக்கும் நன்றி

1973 ம் ஆண்டு திருத்தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயபரிபாலன சபையின் தலைவரான போது ஆரம்ப காலத்தில் இக்கோயிற் திருப்பணிகளை எவ்வாறு நிறைவேற்றுவேன் என நினைத்து சற்றுப் பயமடைந்ததேன்

ஆனாலும் மனம் தளரவில்லை சோர்வடையவில்லை இவற்றுக்கெல்லாம் காரணமாக சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் குருக்கள் பிரம்மஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயா அவர்கள் எனக்கு அறிமுகமானார். அவர் மூலமாகத்தான் 1977ல் 27 வயதையுடைய எஸ். எஸ். மகேஸ்வரன் ஆச்சாரியார் அவர்கள் அறிமுகமானார். யார் பார்த்தாலும் இவர் இப்பணிக்கு ஏற்றவரா என ஐயுறும் தோற்றத்துடன் எமக்குக் காணப்பட்டார். அவ்வேளை யாழ்ப்பாணத்திலே சில கோயில்களிலே இடம்பெற்ற இவரது வேலைகளை நானும் எனது கோயில் கணக்குப் பிள்ளையுமாகிய திரு. க. நாகராசாவும் சென்று பார்வையிட்டோம். சிறிய அளவிலான வேலைகள் தான் செய்திருந்தார். எனினும் எமது ஆலய வேலைகள்மூலம் இவருக்கு முன்னேற்றத்திற்கு இடமுண்டு என்ற முடிவுக்கு நான் வந்தேன். இந்தியாவில் இருந்து கட்டட வேலைக்கு ஆட்கள் கொண்டுவர வேண்டுமென்ற பலரின் கருத்துக்களையும் தவிர்த்து எமது நாட்டின் இளைஞர் ஒருவரின் கலைத்திறனுக்கு இடமளிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் ஆலயத்தில் சகல கட்டுமான வேலைகளையும் சபையுடன் கலந்து பேசி அவரிடம் பாரம் கொடுத்தேன். ஆனால் அதிசயிக்கத் தக்க முறையிலே விதிமுறைகள் அளவுப்பிரமாணங் கள் அனைத்தும் எள்ளளவும் வேறுபாடின்றி கட்டு வேலைகள் அனைத்தையும் அவர் பூர்த்தியாக்கினார். அவரது முயற்சியிலேயே தென்னிந்தியாவிலிருந்து திருவானைக்காவைச் சேர்ந்த பிரபல்யமான குருசாமி ஸ்தபதியார் குழுவினரை வருவித்து சிவனுக்கு அமைத்த திரிதள விமானத்திலே திருவிளையாடற் புராணத்தில் வரும் சிவனின் திருவிளையாடல்கள் சிலவற்றை சித்தரிக்கும் சிற்பங்களுடன் ஏனைய அலங்காரச் சிற்பங்களையும் அமைத்தனர் அதே போன்று அம்பாளுக்குரிய துவிதள விமானத்தில் கௌரி அம்பாளின் கேதார கௌரி விரதத்தின் மகிமை கூறும் கதையை சிற்பமாக அமைத்து அழகு படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாத்திரை - ஓர் அதீத அனுபவம்

இன்று ஆண்கள், பெண்கள், சிறியவர்கள், பெரியவர்கள், படிக்கின்றவர்கள், தொழில்புரிகின்றவர்கள் உள்ளிட்ட சகல மக்கட் பிரிவினரும் பல்வேறு காரணங்களுக்காக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல வேண்டிய அதாவது பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கிரமமான தினசரி பிரயாணம், சுற்றுலா, உல்லாசப்பிரயாணம், என்பன சமய சார்பற்ற பிரயாணங்களில் அடங்குகின்றன விஞ்ஞான வளர்ச்சி காரணமாகப் பிரயாணத் துறையில் உண்டான புதிய பரிணாமங்களில் விண்வெளிப்பயணம் சந்திரப் மண்டலப் பிரயாணம், செவ்வாய்க்கிரகப் பிரயாணம் என்பன குறிப்பிடத் தக்கன.

இத்தகைய பிரயாணப் பிரிவுகளில் இருந்து பெரிதும் வேறு பட்ட யாத்திரை ஒரு காலத்தில் படையெடுப்பு என்னும் புறத்திணைத்துறை நிகழ்ச்சியை "யாத்திரை" என்று கூறும் வழக்கம் தமிழ் மக்களிடையே நிலவியது இதனைத் "தகடூர்யாத்திரை" "பெருங்கதை" என்னும் பழைய இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். ஆனால் இன்று யாத்திரை என்ற சொல் அப்பழைய பெயர் வழக்கு உணர்த்தும் சமயச்சார்பற்ற பொருளை இழந்து விட்டது. இப்போது யாத்திரை என்னும் பதம் சமய கடமைகளுக்காக ஒருவர் தனித்தோ பலரோடு இணைந்தோ ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் சென்று அல்லது ஒரு நாட்டினுள்ளே ஓரிடத்திலிருந்து புறப்பட்டு பல்வேறு வழிபாட்டிடங்களுக்கு அதாவது திருத்தலங்களுக்குச் சென்று அச்சமயக் கடமைகளை நிறைவேற்றுவதையே குறிக்கின்றது.

சமயக்கடமைகளுக்காக மேற்கொள்ளப்படும் யாத்திரை தனிநபரின் முயற்சியின் விளைவான பிரத்தியேகக் குடும்ப யாத்திரையாக இருக்கலாம் அல்லது தள வழிபாட்டு யாத்திரைகளை ஒழுங்கு செய்யும் சமய மன்றங்கள், முகவர் நிலையங்கள் என்பவற்றின் அமைப்பு ரீதியான முயற்சியின் முடிவான பக்தர் கூட்டு யாத்திரையாக இருக்கலாம். போக்குவரவு வசதிகள் பெருகியுள்ள இந்த இருபதாம் நூற்றாண்டிலே கதிர்காமம், திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் என்ற பாடல் பெற்ற பழமை வாய்ந்த தலங்களுக்கும் சிலாபத்து முன்னேச்சரம், நயினை அம்பாள் ஆலயம், மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் போன்ற பழமையும் புதுமையும் பொலியும் தலங்களுக்கும் சைவ சமயிகளும், சமய சமரசம் பேணும் பக்தர்களும் ஆண்டு தோறும் நிகழும் அலங்கார திருவிழாக் காலங்களிலே பிரத்தியேக வாகனங்களிலும், தனியார் துறை வாகனங்களிலும், பொதுத்துறை வாகனங்களிலும் குடும்பம் குடும்பமாகத் தலயாத்திரைகள் மேற்கொள்ளுவதைப் பலரும் அறிவர். மேலும் பழைய யாத்திரை மரபுகளைப் பேணும் பக்தர்கள் இன்று கூட பாத யாத்திரையாக கதிர்காமம் செல்லுவதைக் கண்டும் கேட்டும் சமய ஆர்வலர்கள் வியந்து மதிக்கின்றனர். இவற்றின் வேறாக நிறுவன முயற்சிகளின் பயனாக தென்னிந்திய திருத்தல யாத்திரை, வட இந்தியாத் திருத்தல யாத்திரை காசியாத்திரை திருக்கையிலை யாத்திரை போன்ற கூட்டு யாத்திரைகளை மேற்கொள்ள விரும்பும் பக்தர்கள் சிவராத்திரி, நவராத்திரி, குருபூர்ணிமா, பாபாஜயந்தி போன்ற விசேட விழாக்காலப் பகுதிகளிற் புறப்பட்டு பல தலங்களுக்கும் சென்று ஆலய தரிசனம் செய்வதையும், ஆன்மீகப் பெரியார் தரிசனமும் ஆசியும் பெற்று திரும்புவதையும் இங்கு குறிப்பிடலாம்.

இத்தகைய யாத்திரைகளுக்கு ஒருவரலாற்று பாரம்பரியமே உண்டு. சிவ சமய கோட்பாடுகளைப் பேணிய சைவ அடியார்களும் அறுவகைச் சமயங்களிலே அதனோடு நல்லுறவைப் பேணிய ஏனைய சமய அடியார்களும் பல்லவராட்சிக் காலங்களிலே சமய மறுமலர்ச்சியின் ஒரு கருவியாக யாத்திரை என்னும் நிகழ்ச்சிக்குத் தனிப்பெருஞ் சிறப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. முற்காலத்தில் வாழ்ந்த அந்த புனிதர்கள் இட்ட அத்திவாரமே யாத்திரை என்பது இன்று கூட ஒரு பவித்திரமான, தெய்வநம்பிக்கையைப் பேணுகின்ற உன்னத பயன் தரவல்ல சாதனமாக நீடிப்பதற்கு காரணமாயுள்ளது.

யாத்திரை என்பது ஒரு பவித்திரமான வாழ்க்கையின் தொடர்ச்சியாகவோ, புதிய தொடக்கமாகவோ, ஆன்மீக நிலை உயர்வின் கருவியாகவோ சிறந்து விளங்க வேண்டுமானால் இந்த புனித முயற்சிக்கு வித்திட்ட, அடித்தளம் அமைத்த முன்னோர்கள் பின்பற்றிய நியமங்கள், இயமங்கள் ஆகியவற்றை நாமும் கடைப்பிடிக்க வேண்டும். மூவர் முதலிகள் எனப்படும் ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசும், ஆளுடைய நம்பியும் தல யாத்திரை செய்த போது அவர்கள் தமது ஒழுகலாற்றின் மூலம் செய்யத் தக்கவை என்று உணர்த்திய நியமங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தகாதவை என்று விலக்கிய இயமங்களையும் ஏற்றுக்கொள்ளல் பொருத்தமாம். அவற்றின் முக்கியத்துவம் என்ன, முடிவான பயன்கள் என்ன என்பதை அறிய வேண்டுமானால் ஆளுடைய அடிகளாகிய மணிவாசகப் பெருமானின் "யாத்திரைப் பத்து" என்னும் திருவாசகப் பிரிவில் கூறும் சிந்தனை வீச்சுக்களை ஒரு முறை நினைவு கூருதல் போதும்.

யாத்திரை கால நியமங்களாக மணிவாசகர் கூறும் பின்வரும் சிந்தனைக் கூற்றுக்களில் அடங்கியுள்ள கூடப்பாடுகள் பின்பற்றற்குரியன

"உடன் போவதற்கே ஒருப்படுமின்"
"புயங்கப் பெருமான் பூங்கழல்கள் மிகவே நினைமின்"
"சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்"
"புகழ்மின், தொழுமின், பூப்புனைமின்"

இதே போல யாத்திரை செய்வோர் செய்யத் தகாதவை அதாவது விலக்க வேண்டியவையென மாணிக்கவாசகர் பின்வரும் பொருந்தாச் செயல்களை விதந்து கூறுகின்றார்.

"புகவேண்டா புலன்களில் நீர்"
"மிக்க எல்லாம் வேண்டா போகவிடுமின்கள்"
"எல்லீரும் அகல விடுமின் விளையாட்டை"
"விடுமின் வெகுளி, வேட்கை, நோய்"
"இகழ்மின் எல்லா அல்லலையும்"

யாத்திரை செல்லுவோர் பால் அமைய வேண்டிய கூட்டுணர்வு அல்லது ஒற்றுமையுணர்வு, திரிகரணங்களின் முழுமையான தெய்வீக ஈடுபாடு என்பன மணிவாசகர் கூறும் நியமங்களின் உட்பொருளை விளக்குகின்றன. தீவிரப்போக்கு, விளைட்டு மனப்பாங்கு, முக்குற்றங்கள், மனவமைதியைக்குலைக்கும் துன்பங்கள் என்பன தவிர்க்க வேண்டியவை அல்லது ஒழிக்க வேண்டியவை என்பது மாணிக்கவாசகர் கூறும் இயமங்களின் உட்கிடை.

யாத்திரை என்பது ஒரு புனித முயற்சி, தெய்வீகக் கடமை எனவே அதன் நோக்கங்களும் பயன்களும் ஆன்மீகச்சார்புடையனவாக விளங்குதல் பொருத்தமே தவிர உலகியற் சார்பானவையாக இருத்தல் ஏற்புடையதாகாது. ஆன்மீக நலன்கருதித் திருத்தலயாத்திரை தொடங்குவோர் சுற்றுலாவுக்குரிய அல்லது உல்லாசப்பிரயாணத்திற்குரிய உலகியல் அம்சங்களான புதிய இடங்கள், காட்சிகளைப் பார்த்து புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளல் பொழுதுபோக்கு இன்பநுகர்ச்சி அபூர்வப்பொருள்கள் பண்டங்களை விலைக்கு வாங்குதல் என்னும் இத்தகைய பொருத்தமற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் ஆன்மீக நன்மைகளை இழக்க நேரிடும். இவற்றைத் தமது ஒரு முனைப்பட்ட கவனத்தைச் சிதைத்து விடும். கவனம் குழப்பிகளாகக் கருதுவோரே ஆன்மீக ஈடேற்றப் படிகளில் மேலேறிச் சென்று இறுதி இலட்சியத்தை அடைய முடியும். எனவே கவனக் குழப்பிகளான சொற்களும் செயல்களும் எதிர்ப்படும் போது எவர் அவற்றைப் புறக்கணித்து தமது நோக்கத்தை அல்லது இலட்சியத்தை அடையப் புனித யாத்திரையை முன்னெடுத்துச் செல்கிறாரோ அவரே பூரண சமய வாழ்க்கை என்னும் தொடர் யாத்திரையிலும் வெற்றியடைவார்.

திருநாவுக்கரசு நாயனார் திருக்கைலாய தரிசனத்தை இலட்சியமாகக் கொண்டு தமது திருத்தல யாத்திரையின் ஒரு முக்கிய கட்டத்தை முன்னெடுத்துச் சென்ற போது அவரது ஒரு முனைப் பட்ட கவனத்தைச் சிதைத்து அவரை திசைதிருப்பி விட முனைந்த மாய மனித வடிவத்தின் சோதனையில் அவர் அடைந்த வெற்றியே மண்ணில்வாழ்பவர் கட்கு கிடைத்தற்கரிய கைலைத் தரிசனத்தை தெய்வ வாக்கிற்கு அமைய திருவையாற்றிற் காணும் ஆன்மீக நிலையுயர்வை யாத்திரைப் பயனாக அவருக்கு அளித்தது.

**வை. கா. சிவப்பிரகாசம்,**
எம். எம். (தமிழ்). எம். ஏ
கல்வி இடைவரவு விரிவுரையாளர்.
திறந்த பல்கலைக்கழகம்

"புகவேண்டா புலன்களில் நீர்", "விடுமின் வெகுளி, வேட்கை, நோய்" என்பவற்றைப்போற்றி வாழ்ந்தவர் அப்பர். "புகழ்மின்", தொழுமின், பூப்புனைமின் என்பவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர் தொண்டின் உறைவிடமான அப்பர் மேலும், இறை சிந்தனையைத் தவச்சிந்தனையாகப் பேணி பிற சிந்தனைகளை அவச்சிந்தனையாக ஒதுக்கியவர் அவர் இத்தகைய பெரும் பக்தர் திருப்புகலூரில் வாழ்ந்த போது ஏற்பட்ட சோதனையும் அதனை அவர் எதிர்கொண்ட விதமும் அதன் முடிவான வீடு பேறு என்னும் பயனும் இச்சந்தர்பத்திற் சற்றுச் சிந்தித்தற்குரியன. ஆசைகளைத் தூண்டவல்ல அரம்பையரின் நடனத்திற் சிந்தையைப் பறி கொடுக்காத அப்பரின் மனத் திட்பம் தல யாத்திரைகளின் பயனாக அவர் வளர்த்துக் கொண்ட ஆன்மீகப்பக்குவ நிலையின் வெளிப்பாடு ஆகும், அவர் உழவாரப்படையால் புல் பூண்டுகளைச் செதுக்கும் போது செங்கற் கல் சில பொற்கற்களாக மாறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றப்பாடு ஓர் இயற்கையிகந்த கவனக்குழப்பி யாகும். இச் சந்தர்ப்பத்தில் அத் தோற்றப்பாட்டினால் சிந்தை குழம்பாது இரு பொருள்களையும் ஒன்றாக மதித்து தொடர்ந்து சலனமில்லாமல் தொண்டு புரிந்தமை பொன்னாசை இல்லாமை அல்லது பொருட் பற்றின்மை என்னும் ஆன்மீகப் பண்பு யாத்திரைப் பயனாக அவரிடம் உறுதிபெற்ற மற்றொரு நிலை வெளிப்பாடு ஆகும்.

எத்தனையோ தலங்களுக்கு தலயாத்திரை செய்து அருஞ்செயல்கள் பல புரிந்து ஆன்மீகப்படி களில் மேலேறிச் சென்ற அப்பர் தமது யாத்திரை களின் முடிவான பயனையும் உயிர்வாழ்க்கையின் உன்னத பயனையும் அடைந்து கொள்வதற்காகக் கவனக் குழப்பிகளைப் புறக்கணித்து மன ஒருமைப்பாட்டைக் காத்துக் கட்டியெழுப்பிய திறன் அவரின் பூரண வாழ்க்கைப் பயணத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இவ்வுண்மை யாத்திரைகளை மேற்கொள்ளுவோர். எப்போதும் சிந்தனையில் இருத்திச் செயலிற் கடைப்பிடிக்க வேண்டிய அரிய போதனையாகும்.

திருத்தல யாத்திரை என்பது ஓர் அதீத அநுபவம் அந்த அநுபவத்தை பெற்றுத் தமது உலக வாழ்வில் இகபர நன்மைகளைத்துய்க்க விரும்பும் சமய ஆர்வலர்களின் சிந்தைக்கு மணிவாசகப் பெருமான் அருளிய பின்வரும் மணியான வாசகத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

"விடுமின் வெகுளி வேட்கை நோய் மிகவோர் காலம் இனி இல்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு உடன்போவதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள் அணியார் கதவதடையாமே
புடைபட்டு உருகிப் போற்றுவோம் புயங்கன் ஆள்வான் புகழ்களையே"

(திருவாசகம் – யாத்திரைப் பத்து)

*அனைவருக்கும் நன்றி தொடர்ச்சி.........*

இது தவிர ஏனைய விநாயகர், முருகன், சனீஸ்வரன், நடராஜர் போன்ற சந்நிதிகளிலும் அவர்களின் கைவண்ணம் வெளிப்படுத்தப்பட்டு அனைத்தும் வர்ணம் தீட்டி முதலாம் கட்ட வேலைகள் முடிக்கப் பெற்று 28 - 1 - 1980ல் சகலரும் வியக்கும் படியாக 33 குண்டபட்ஷ கும்பாபிஷேகம் பிரம்மஸ்ரீ நா. சோமாஸ்கந்த குருக்கள் அவர்களினால் நடாத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து எமது திருப்பணியின் இரண்டாவது மூன்றாவது கட்ட வேலைகளை ஆரம்பிப்பதில் நாட்டு நிலமை சீராக இல்லாத காரணத்தினால் யாவும் தடைப்பட்டது. முயற்சி திருவினையாக்கும் என்பதற்கிணங்க நாம் திருப்பணிகளைத் தொடங்க முட்பட்டோம் அதன் பயனாக 1996ம் ஆண்டு பிரம்மஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களால் பாலஸ்தாபனம் செய்து திருப்பணி வேலையை மகேஸ்வரன் ஆச்சாரியார் அவர்களிடம் ஒப்படைத்தேன் அவர் ஏற்ற பணியை சிரமேற் கொண்டு இரவு பகலென்று இல்லாதவாறு பணிகளை மேற்கொண்டு இந்தியாவில் இருந்து வருவித்த கலைஞர்களின் கைவண்ணத்திலே சிலைகள் அமைத்தும் இந்திய கலைஞர்களினாலேய முழுக் கோயில் விமானங்கள் மண்டபங்கள் இராஜகோபுரம் ஆகிய அனைத்தும் வர்ணம் தீட்டியும் கும்பாபிஷேகம் நடைபெற வழி வகுத்தனர்.

26 - 03 - 99ம் திகதி ஆரம்பித்த இயந்திர பூஜை முடிவுற்று ஏனைய கிரியைகள் அனைத்தும் பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் அவர்கள் தலைமையில் ஏனைய குருக்கள் மாருடன் ஆரம்பித்து 20 - 04 - 1999ல் மூர்த்தி கட்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெற்று 21 - 04 - 1999ல் நவகுண்ட புனருத்தாரண கும்பாபிஷேகம் நடாத்தி வைக்கப்பட்டது.

இக்கும்பாபிஷேக ஆரம்ப வேலைகளின் போது எமக்கு சகல துறையிலும் உதவிய சமூக இயக்கங்களைச் சேர்ந்த அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

**ஸ்ரீ. கா. சிவசுப்பிரமணியம் ஜே. பி.**
தலைவர்
ஆதிகோணநாயகர் தேவஸ்தானம்.
தம்பலகாமம்.

# இவர்கள்.... பெரிய மனிதர்கள்...

(திருமலை சுந்தா)

அந்த வரிசை நீண்டு கொண்டிருந்தது. ஆயிரம்; ஆயிரம் மலைப்பாம்புகளின் நீளம். குஞ்சுகள்; குட்டிகள்; கிழடுகள் எல்லாம்.. எல்லாம்... அந்த மலைப்பாம்புகளின் வரிசையில் தான் கொட்டும் அக்கினி மலையில் நனைந்து.. நனைந்து கொண்டு தான்.....

அப்படியென்ன அந்த வரிசைக்கு இத்தனை மகத்துவம்? அந்த வரிசை எதை எதிர்பார்த்து.. எதிர்பார்த்து இப்படி நீண்டு.. நீண்டு... அது எங்கே போகின்றது.

நெற்கதிரில் பட்டு; ஓடும் வாய்க்கால் நீரில் விழுந்து குளித்து "குளித்து" அந்த நீண்ட வரிசையை அக்கினி மழையில் இருந்து காப்பாற்ற நினைக்கும் தம்பலகமத்தின் காற்றிருக்கே......... காற்றிருக்கே.........அந்த காற்றுக்கு மட்டுமல்ல......

அந்த பாதையோரத்தில் நெற்கதிர்களுக்கு உயிரூட்டும் வாய்க்கால் வழி இருக்கே...... அந்த வாய்க்கால் வழியின் உதவியும் அந்த நீண்ட வரிசையின் கால்களுக்கு குளிரூட்டி; தென்பூட்டாதிருந்தால்..........

தம்பலகமத்தின் சூரியனை.. அதன் சூட்டை அந்த மலைப்பாம்பு வரிசை எப்படி தாங்கி இருக்கும்?? தாங்க வேண்டும் என்ற நியதி அந்த வரிசையின் நெஞ்சங்களில் அலைமோத... அலைமோத.......

வரிசையில் நிறைந்த கண்கள் எல்லாம் எப்போது.....எப்போது..... அந்த வாசல்.....அந்த கோபுரம்..... எப்போது..... எப்போது...... திருவுருவங்களில் தம் கைபடும் என்ற இன்ப வேதனையில்.............

"ஆதி கோணேசர் ஆலய" மூர்த்திகளுக்கு இன்று எண்ணைதேய்ப்பு விழா. நாளை முழுக்கு. இந்த கடமைகளுக்காகத் தான் அந்த வரிசை நேரம் செல்லச் செல்ல இன்னும் நீண்டே கொண்டிருக்கின்றதா??

தம்பலகமத்தின் சூரியன் உச்சிக்கு வந்து ஆதிகோணேசர் ஆலயத்திற்கு வெளிச்சம் போட்டு.... போட்டு..... தன் கெட்டித்தனத்தை காட்ட.....காட்ட.... திருகோணமலை நகரத்தின் தென் திசைப்பக்கமாக வர்ண பகவானும் தம்பலகமம் நோக்கி தன் படையணிகளை நகர்த்த தொடங்கினான். கறுப்பு முகில் அரக்கர்கள் வேகமாக தம்பலகமம் கோணேசர் கோவில் நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள்.

"மழை வரப்போகுது........சனமும் போகுதுகள் இல்ல......." அன்னமாகிழவி அந்த கால் கடுக்க நின்ற வரிசையை திரும்பிப்பார்த்தாள்.

அவள் தன் வேதனையை மறந்து சிரித்தாள். 'நாங்கள் மழை வாரதுக்குள்ள எப்படி ஆகிலும் கோயிலுக்குள் போயிடுவம் இவையள் பாடு....'

அன்னமா கிழவி சிரித்தாளும் அவளின் கண்கள் உச்சியில் நின்று வேடிக்கை பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த சூரியனுக்கும் எச்சரிக்கையான அறிவித்தல்களை கொடுக்க மறந்தனவாக வில்லை.

'டேய் சூரியா போய்.. வருகிற வருணனை மறி......... உன்ன தாங்கினாலும் வருணனை தாங்க முடியாது....'

'ஆச்சி என்ன நீ இப்படி நின்றால்.. நடவன்.... நடவன்....' ஏழாத நேரத்தில நீ....'

துலி நேரத்தில் தன்னை மறந்து போன அன்னமாகிழவி...தன்கையில்உள்ள நல்லெண்ணை ஒவ்வொறுப் போத்தலை பத்திரப்படுத்தி.... கவனப்படுத்தி..... காலைத் தூக்கி... காலைத் தூக்கி...... வயல்வாய்க்கால் தரும் இதமான அந்த தம்பலகமமண்ணில் கால் பதித்து.. கால் பதித்து.... தன் இடைவெளியை நிரப்ப.. நிரப்ப நடக்க தொடங்கினாள்.

"ஆச்சி போகாதே சனத்துக்க நெரிப்பட்டு செத்துப் போவாய். நிறைய சனம் வரும்....."

அன்னமா ஆதிகோணேசர் எண்ணைக் காப்புக்கு வெளிக்கிட்ட போது அவளின் பெரிய மகன் மறித்துப் பார்த்தான்.

'தம்பி.. பக்கத்து வீட்டு அயல் சனத்தோடு நான் கவனமாக போயிட்டு வருவன். நீ எனக்கு எதையும் சொல்லாதே.... ஏனடா... நீயும் உன்ர பெண்சாதி பிள்ளைகளோடு ஒருக்கா வந்தாலென்ன.....' மகன் சிரித்தான். அந்த சிரிப்பு.. அந்த சிரிப்பு...... அது தந்த வேகம் தான்........ எழும்ப் முடியாமல்.. தட்டி.. தடவி.... வீட்டிலேயே தாண்டவமாடும் அன்னமா கிழவிக்கு.. அன்னமா கிழவிக்கு..............

**'மனம் தான் எல்லாம் மனதைப் பொறுத்தே சகலதும் மனப் படியே நடக்கும்'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற.. என்ற.... அந்த காவிகள்..... பேச்சாகள காவிகள்..........

அன்னமா கிழவியின் கண்கள் விரிந்தன. அந்த கார் மெதுவாக அன்னம்மா நின்ற வரிசையைக் கடந்து.. கடந்து.....

காரில் இருந்து காவிகள்.... இன்னும் சிலர்.... இறங்கினர்கள். கார் தரிக்கும் இடத்திற்கு நகர.. அவர்கள்.... அவர்கள்....

அன்னம்மா கிழவியின் கண்கள் ஏமாந்து தவித்தன.அவர்கள்... அவர்கள் எல்லாம் தான் நின்ற வரிசைக்கே வருவார்கள் என்றே அவளின் கண்கள் எதிர்பார்த்திருந்தன.

ஆனால்.. ஆனால்..... அவர்கள் எல்லாம்....... அவர்கள் எல்லாம்........ அவர்கள் அவளின் கண்களில் இருந்து மறையும் மட்டும்...... மறையும் மட்டும்........

அன்னமா கிழவிக்கு இனம் புரியாத ஏதோ ஒரு அருட்டுணர்வு.. மெல்ல - மெல்ல - அடிவயிற்றி லிருந்து மேலெழுந்து.. மேலெழுந்து...........

'நாங்கள் எல்லாம்.. கால் கடுக்க மணித்தியால கணக்கில் இந்த அகோர வெயிலில் நிற்கிறோம். ராசாக்கள் போல வந்து எண்ணைக் காப்பை வைச்சிபோட்டு போகப் போயினம். இவையளப் போல நாங்கள் மனிசர்தானே..............'

அன்னமா கிழவியின் காதுகளில் அந்த தம்பலகமத்து குளிர் காற்று வந்து புகுந்து.. போக வழியில்லாது அவளில் நிரம்பி.. நிரம்பி.......

' எணை ஆச்சி.. ஏழாதனி... போய் அந்த மரநிழலில் இரு.... நாங்க கோயில் வாசல் பக்கம் வந்தவுடன் நீயும் வரலாம் தானே......' என்று தன் பின்னால் நின்ற யாரோ தெரியாத முகமொன்று கூறிய போது....'

'மோனை.. கால் கடுக்க... கால் கடுக்க..... உடல் பாரம் நோக..நோக... அந்த மாமிச மலையை நகர்த்தி; நகர்த்தி.. போய் அவனுக்கு எண்ணைக் காப்புவைக்க வேனும் மோனை. ஏலாதனான் என்றால் இஞ்ச வந்திருக்ககூடாது. எனக்கு ஏழும் என்றதால் தானே வந்தனான்....நான் நடப்பவன் இந்த மனிசரோட நானும் ஒருத்தியாய் நான் நடப்பன். என்னைவிட அங்க பார் சின்ன சிறிதொன்றை தூக்கிவைச்சுக் கொண்டு... இரண்டு பிளிளைகளை இழுத்துக் கொண்டு போக முடியாம இந்த வரிசையில.... அந்த பெள்ளை பார் மோணை... இது பழங்கட்டை மோணை...... நடப்பன்... நடப்பன்...'

அன்னமா பத்து நிமிடத்திற்கு முன்..... வரிசையில் கால் பதித்த.. போது அந்த நினைவொன்று வந்து போனது.

'யாறென்றாலும் ஒரு நீதி வேனும் .இவையளுக்கென்ன பலன் கிடைக்குமென்றோ நினைக்கிறிங்க. இவையள் இஞ்ச தான் மற்றவைக்கு பெரிய மணிசர். போற இடத்தில பாருங்கள் அவையன்ர நிலையை....' கடைசியாய்

அன்னமா கிழவியின் பக்கத்தில் இருந்து ஒரு குரல் வந்தது.

'எணை உனக்கு முந்தி சொன்னனான்தானே.... ஏழு தனி..... வரிசையை விட்டுட்டு முன்னுக்கு போ..நீ.. இந்த வரிசையில் நின்று நடந்து வரமாட்டாய்....'

முந்தின குரல் அன்னமாக் கிழவியை அதட்டியும் சொல்லிப்பார்த்தது.

'அவையள் பெரியமனிசர். கோயில் மத சம்பந்தப்பட்ட விடயங்களில் வேண்டப்பட்டவர்கள் அவையள் போறதில; நாங்கள் இதுகளகண்டு சொல்லக் கூடாது.'

## நெறிக்கதை

அன்னம்மா கிழவி வாய் திறந்து சொல்ல நினைத்தாள் முகத்தில் மட்டும் அந்த புது ரேகைகள் எப்படித்தான் திடீரென முளைத்தனவோ??

**'எங்களால் முடிந்ததை நாங்கள் செய்கிறோம் அவர்களால் முடிந்ததை அவர்கள் செய்கிறார்கள் நாங்கள் அவர்கள் அல்லவே. அதே போல் அவர்களும் நாங்கள் போல் அல்லவே.'**

அன்னமா கிழவிக்கு எங்கோ கேட்ட ஞாபகம் அப்போது திடீரென முளைத்தது.

வரிசையில் எழந்த குரல்கள்........
இப்போது.. இப்போது...........
அவளின் காதகள் செவிடாகி விட்டனவா?
ஏதுமே அவளுக்கு கேட்கவில்லை.

வரிசை உடைந்து... நீதி கேட்டு.... பலர் முறைதவறி முன்னுக்கு போனார்கள்.போயே விட்டார்கள்.....

ஆனால்... அவள்... அவள்... அந்த கிழவி.... அந்த கிழவி...தன் பங்கு வருமட்டும்.... வருமட்டும்... காத்திருந்து.. காத்திருந்து... அந்த ஆதிமூலகோண நாயக பெருமானுக்கு எண்ணைக்காப்பி.... காப்பி.......

வருண பகவான் வருவதற்குள்
அவள் எண்ணை காப்பிட்டு விடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆதிகோணநாயகர் ஆலயத்தின் தொன்மையும் மகிமையும்



பச்சைப் பசேலென்று பாய் விரித்தாற் போல் வயல் வெளிகளையும் நெடிதுயர்ந்த தென்னஞ் சோலைகளையும் அவ் வயல்களினூடே வளைந்து நெளிந்து ஊடுருவிச் செல்லும் பல சிற்றாறுகள் கண்ணுக்கு விருந்தளிக்கும் இவ்வழகிய கிராமமாகிய திருத்தம்பலகாமத்தின் மத்தியில் ஹம்சஹமனாம்பிகா தேவி சமேத ஆதி கோணநாயகர் சுவாமி கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

இவ்வழகிய கோயிலின் தொன்மையை எடுத்து நோக்கும் போது இற்றைக்கு பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்வாழ்ந்த சமய குரவர்களுள் ஒருவராகிய திருஞான சம்பந்தப் பெருமானால் பாடல் பெற்ற தலமாகிய கோணேஸ்வரத்தை தொண்டு செய்து கோயில்கள் கட்டி வளம் பல பெருக்கி வந்த குளக்கோட்டு மகாராஜா மன்னன் இவ்வாலயத்தை புனருத்தாரனம் செய்து குளமும் கட்டி தொழும்பாளர்களை நியமித்து அவர்களுக்கு வயல் கொடுத்து வளம் பல பெருக்கினார் என்று திருக்கோணேஸ்வர கல்வெட்டு, தென்கைலாய மான்மியம் போன்றவற்றிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

இச்சிறப்பு மிக்க மாபெரும் ஆலயத்தை 1624ம் ஆண்டு போர்த்துக் கேயர் இடித்து அழித்து முக்கோண வடிவ 'பிரட்றிக்' கோட்டையைக் கட்ட முயன்ற போது மக்கள் அங்கிருந்த ஆதிகோண நாயகரை எடுத்துக் கொண்டு வந்து தம்பலகாமத்தில் சுவாமி மலை என்ற இடத்தில் ஒளித்து வைத்து பூசைசெய்து வழிபட்டு வந்ததாகவும், பின்னர் இங்கு ஒரு கோயிலைக் கட்டி ஆதிகோணநாயகரை பிரதிஷ்டை செய்ததாலும் வேடுவர் காலத்து பூசை மரபுகள், வேள்விகள் இங்கு இன்றும் பேணப்படுவதாலும் கோயிலும், குளமும் கண்ட மன்னன் விதித்த நடைமுறைகள் இன்றும் இக்கோயிலில் கைக்கொள்ளப்படுவதாலும் இது ஆதி கோணநாயகர் ஆலயம் என்று போற்றப்படுகின்றது.

ஆதிகோணநாயகர் இவ்வாலயத்திற்கு வந்த பின்னர் திருக்கோணேஸ்வர ஆலயத்தின் மானிய முறையிலான வயல்கள் இவ்வாலய பரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டு ஆண்டுக்கு இரு தடவை சிறுபோகம், பெரும்போகம், என தொழும்பாளர்களுக்கு மானிய முறையிலும், மக்களுக்கு ஏலத்திலும் கொடுத்து அதனால் வரும் பணத்தை ஆலய சேவைக்குப் பயன்படுத்துகின்றனர்.

சிறப்புடன் விளங்கிய இவ்வாலயம் மறுபுனருத்தாரணம் செய்து பல இலட்சம் ரூபாய் செலவில் 1980ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்று அழகுடன் மிளிர்ந்தது. பின்னர் 1983ம் ஆண்டு நடை பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்த பெரும் சேதத்துக்கு இவ்வாலயம் உள்ளானது. இச்சேதத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இவ்வாலயம் மீண்டும் புதுப்பொலிவுடன் புனருத்தாரணம் செய்யப்பட்டு மிகவும் சிறப்புடன் 1999ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றுள்ளது.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' எனும் கூற்றுக்கிணங்க தம்பலகாமம் ஊருக்குள் நுழைந்ததும் கம்பீரமாக தோன்றும் இந்திய சிற்பபாச்சாரியர்களால் உருவாக்கப்பட்ட ஏறத்தாழ அறுபது அடி உயரமுடைய ஏழு கலசங்கள் பொருத்தப்பட்டு மிகவும் அழகும், சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற கோபுரம் மக்களை பக்திப் பரவசத்திற்கு ஆட்படுத்தி 'வருக வருக' என தலை நிமிர்ந்த வரவேற்கின்றது.

இக்கோயிலில் கருவறையில் பிரமாண்டமான சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது உள் வீதியில் பிள்ளையார், நந்தி, முருகன், சண்டேஸ்வரர், ஆதிகோணநாயகர், நவக்கிரகங்கள், வைரவர், நாகதம்பிரான், நடராஜர் போன்ற தெய்வங்களும் எழுந்தருளி உள்ளன. அத்துடன் யாக சாலை, வசந்த மண்டபம், மடம் போன்றனவும் பிரமாண்டமான மணிக் கோபுரமும் அமையப் பெற்றுள்ளது. அத்துடன் விசாலமான வெளிவீதியுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் மகிமையாக ஊர் வயல்களுக்கு நீர் தேவைப்படும் போது விதிப்படி பொங்கலையும் வேள்வியையும் செய்து கோணநாயகருக்கு நேர்த்தி வைத்து பச்சைப்பட்டுக் கட்டி மழை பொழிய வைப்பதும், நீர் மிகுந்து வேளாண்மை பாதிப்புறும் போது கோணநாயகருக்கு நேர்த்தி செய்து சிவப்பு நிறப்பட்டு கட்டி வெயில் ஏற்பட வைப்பதும் இவ்வாலயத்தின் மிகவும் முக்கியமான மகிமையாகும்.

இவ்வாலயத்தின் ஆனி உத்தரத்திற்கு மிகவும் சிறப்பாக துவஜாரோஹணம் என்ற கொடியேற்ற விழாவுடன் ஆரம்பித்து தொடர்ந்து பதினெட்டு நாள் திருவிழா நடைபெறும். பதினெட்டாம் நாள் பாண்டிவேட்டை மிகவும் சிறப்பாக நடைபெறும். அத்துடன் பிள்ளையார் கதை, சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, அம்மன் விரதம், ஆடி அமாவாசை, நவராத்திரி, கௌரிவிரதம், கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, திருவாதிரை ஆகிய விரதங்களும் இவ்வாலயத்தில் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றன. அத்துடன் சூரபத்மன் வதை மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

மேற்படி சிறப்புக்கள் வாய்ந்த 'தாயினும் நல்ல தலைவராக ஆதிகோணநாயகர்' போற்றப்படுகிறார். இவர் தன்னை நாடி வருவோருக்கு துன்பங்களை நீக்கி அருள் பாலித்து மக்களை நல்வழிப்படுத்தி வருகின்றார்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

**இ. வசந்தராஜ்**
ஆண்டு 11
தி/ஆதிகோணேஸ்வரா ம. வி.

---

**திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆதரவுடன் தம்பலகாமம் இந்து இளைஞர் மன்றம், ஆதிகோணநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் தொடர்பாக கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தியது. அக்கட்டுரை போட்டியில் முதலாவது பரிசு பெற்ற தம்பலகாமம் ஆதிகோணேஸ்வர மகா வித்தியாலய மாணவனின் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

---

# கோயில்

1. கோயில் ஓர் சிற்பக்கூடம்!
குறை விலா இசையின் மேடை!
வாயில் பேர் அழகின் வார்ப்பு!
வாழ் ஓவியத்தின் வீடு!
தாயில்லார் கூடும் கோட்டம்!
தாளம் சேர் கூத்தின் கொட்டில்!
நோயுள்ளார் மருந்தின் சாலை!
நூல் ஆயும் முதியோர் இல்லம்!

2. நடையற்றார் கிடக்கும் முற்றம்!
நலிவுள்ளார் பார்க்கும் மூலை!
உடையற்றார் ஒதுங்கும் ஓரம்!
உணவற்றார் உண்ணும் குச்சில்!
முடையுற்றார் தூங்கும் மஞ்சம்!
முன்மாசைக் கழுவும் ஊற்று!
தடையில்லாச் சமன் செய் காணி!
சரியென்றால் கோயில் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும், சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற முதன்மையான இளைஞர்களின் அமைப்பே

## திருக்கோணமலை மாவட்ட

# இந்து இளைஞர் பேரவை ஆகும்.

**இதன் வளர்ச்சிக்கு தாராளமாக உதவுங்கள்**

தி/ஸ்ரீ கணேச அச்சகம் ☎ 026 - 22617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org